# காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

## ஆண்டு அறிக்கை

## 2023

சொற்சுருக்கங்கள்

CoA காணப்படாமைக்கான சான்றிதழ்

CoD மரணச் சான்றிதழ்

CoI விசாரணை ஆணைக்குழு

CTF ஆலோசனைச் செயலணி

DNA தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம்

EU ஐரோப்பிய ஒன்றியம்

GSP முன்னுரிமை தொடர்பிலான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம்

ICRC சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

INGOs சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்

MIA இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போதல் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படுதல்

MoFA வெளிவிவகார அமைச்சு

MoJ நீதி அமைச்சு

MoU புரிந்துணர்வு ஒப்பந்தம்

MSD முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

NGOs அரச சார்பற்ற நிறுவனங்கள்

OMP காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

PC சனாதிபதி சட்டத்தரணி

RTI தகவலுக்கான உரிமை

SLIDA இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

UN ஐக்கிய நாடுகள் சபை

UNWG ஐக்கிய நாடுகள் செயற்குழு

UNWGIED தன்னிச்சையின்றிக் காணமலாக்கப்பட்டவர்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் செயற்குழு

WGIED தன்னிச்சையின்றிக் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய செயற்குழு

உள்ளடக்கம்

தவிசாசளரின் வாழ்த்துச் செய்தி ……………………………………………………5

1. முன்னுரை ……………………………………………………………………7

2. அறிமுகம் ……………………………………………………………………9

3. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் நோக்கங்கள்…………10

4. கடப்பாடுகள்……………………………………………………………………11

5. தூர நோக்குகளும் நிறுவனஞ்சார் முன்னுரிமைகளும் (செயலாற்றற் கொள்கைகள்)……………………………………………………………………11

6. OMP இன் தடம்பதிப்பு……………………………………………………………13

7. நிகழ்வுகள் சார்ந்த இற்றைப்படுத்தல்……………………………………………....14

8. சட்டம், கொள்கை, ஆய்வுப் பிரிவு…………………………………………………..15

8.1 விசாரணைச் செயன்முறை……………………………………………………..16

8.2 சவால்கள்…………………………………………………………………18

8.3 முன்னேற்றம்………………………………………………………………18

8.4 சவால்கள்…………………………………………………………..…..20

8.5 இதுவரையிலான முன்னேற்றம……………………………………………..21

9. தரவுகளை முகாமைத்துவம் செய்யும் பிரிவு……………………………………21

10. பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு…………22

10.1 பா.கு.ஆ.பிரிவும் வெளியக அனுசரணைகளும்……………………………..23

11. நிதி மற்றும் பெறுகைப் பிரிவு……………………………………………………..25

12. மனிவள மற்றும் நிருவாகப் பிரிவு……………………………………………….27

12.1 பணியாளர் ஆட்சேர்ப்பு……………………………………………………28

13. கண்டறிதல் மற்றும் விசாரணை செய்தல் பிரிவு…… …………………………..29

14. பாதுகாப்புப் பிரிவு……………………………………………………………30

15. மூலோபாயத் திட்டம், தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல் பிரிவு……………32

15.1 இலங்கையின் காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின தேவைகள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை………………………………..32

15.2 முந்தைய ஆணைக்குழுக்களும் செயற்குழுக்களும் மேற்கொண்ட கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகள் குறித்துப் புலானய்வு செய்வதற்கும் விசாரணை மேற்கொள்வதற்குமான விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் OMP தோற்றுதல்…………………………………………………………33

15.3 ஊடகங்களுடனான தொடர்பு………………………………………………34

15.4 எண்ணிம நடைமுறை……………………………………………………...34

16. தகவலுக்கான உரிமை…………………………………………………………34

17. 2023 இல் எதிர்கொண்ட சவால்கள்………………………………………………35

18. நன்றி நவிலல்……………………………………………………………………..35

19. தணிக்கையாளர் அறிக்கை…………………………………………………………37

20. நிதி அறிக்கை……………………………………………………………………48

# தவிசாளரின் வாழ்த்துச் செய்தி

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 2018 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது விதி பற்றிய உண்மையை நிறுவுவதற்கான முக்கியமானதொரு படிமுறையாகக் கொள்ளப்படுகின்றது. காணாமல் போன ஆட்களது விதிகளை நிறுவுதற்கான வெளிப்படையான கடப்பாடு OMP இற்கு சட்டவாக்க நடைமுறை ஊடாக வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றப் பேரவையின் மூலம் நியமிக்கப்பட்ட 07 உறுப்பினர்களை OMP கொண்டுள்ளதுடன் தற்போதுள்ள உறுப்பினர்கள் நிலைமாறுகால நீதி, மருவு நீதி நடைமுறை சார்ந்த தத்தமது நிபுணத்துவத்தின் அடிப்படையிலும் பொதுமக்களின் பிரச்சினைகளைக் கையாளுகின்ற அனுபவத்தின் அடிப்படையிலும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். OMP இன் கடின உழைப்பின் காரணமாக விளைவாக காணாமல் போன ஆட்களது பட்டியலை வெளியிட்டு விசாரணைகளையும் OMP ஆரம்பித்துள்ளது.

இவ்வருடத்தில், பலதரப்பட்ட பிரதேசங்களில் OMP முன்னேறத்தினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அலுவலகத்தின் நடவடிக்கைகளிலும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது குடும்பங்களைத் தொடர்புகொள்வதிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. மேலும், அடிப்படையான சட்டரீதியான மற்றும் கொள்கைரீதியான தலையீடுகள் பலவற்றையும், மேம்பட்ட வகையிலான தனியாள் புலனாய்வுகளையும் விசாரணைகளையும் OMP மேற்கொண்டுள்ளது. குறியீட்டு ரீதியான வழக்குகள் பலவற்றுடன் தொடர்புடைய தகவல்களை OMP பெற்றுக்கொண்டதோடு அவை குறித்த பகுப்பாய்வுகளையும் OMP தயாரித்துள்ளது. 2018 ஜூன் மாதம் தொடக்கம் 11 மனிதப் புதைகுழிகளை அகழ்வதற்கான கண்காணிப்பாளராக OMP செயற்பட்டதோடு பொது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் கட்டிக்காப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்மொழிந்து நிதி உதவிகளை வழங்கி விசாரணைகளுக்கும் துணைபுரிந்துள்ளது. முறைப்பாடுகளை நடத்திச் செல்வதற்கு வசதியாக இச்செயன்முறைக் காலப்பகுதியில் கிளிநொச்சியில் பிராந்திய அலுவலகம் ஒன்றை OMP திறந்துள்ளது. இது மேலதிக சேவைகளை வழற்குவதற்கு வசதியாகவும் வருங்காலத்தில் விசாரணைகளை நடத்திச் செல்வதற்கு ஏதுவாகவும் அமையும். இப்புதிய அலுவலகத்துடன் சேர்த்து இதுவரையில் மொத்தமாக 5 பிராந்திய அலுவலகங்களை OMP கொண்டுள்ளது. காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களை நினைவுகூர்வதற்கான ஓர் அங்கமாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தினை இலங்கையிலும் அமைச்சர்கள், சிவில் சமூக நிறுவனங்களது பிரதிநிதிகள், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களது குடும்ப அங்கத்தவர்கள் போன்றவர்களது பங்குபற்றுதலுடன் OMP நிகழ்நிலை ஊடாக நடத்தியுள்ளது.

மேலும், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாளர் நாயகம் அவர்களுடனும், (பிறப்பு மற்றும் இறப்பு) பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்துடனும், இழப்பீடுகளுக்கான அலுவலகத்துடனும், அமைச்சுகளுடனும் செயற்பாட்டு ரீதியான உறவினை OMP நிறுவியுள்ளதுடன் இரு தடவைகள் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதனையும் பல தடவைகள் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனையும் தவிர்ப்பதற்கு அவர்களுடன் இணைந்தும் செயற்பட்டு வருகின்றது. OMP உடனும் கூட்டு முன்னுரிமை தொடர்பிலான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் (GSP+) வணிகச் சலுகைக்கான கைம்மாறாக 27 சர்வதேச சமவாயங்களுக்கு அமைந்தொழுவது தொடர்பில் இலங்கை கொண்டுள்ள முன்னேற்றத்தினை மதிப்பாய்வு செய்கின்ற அதிகாரிகளுடனும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) தூதுக்குழு கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளது. அச்செயன்முறை வெற்றிகரமாகவும் முன்னேற்றகரமாகவும் அமைவதற்கு ஆற்றிய மகத்தான பங்களிப்புகளுக்கு அத்தூதுக்குழு நன்றிகளைத் தெரிவித்துள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவுடனான சந்திப்பு, இராஜதந்திரிகளுடனான சந்திப்பு, நன்கொடை வழங்கும் முகவர்களுடனான சந்திப்பு, தூதுவராலயங்களுடனான சந்திப்பு

ஆகியன கடந்த ஆண்டு காலப்பகுதியில் OMP மேற்கொண்ட மகத்தான முன்னேற்ற நடவடிக்கைகளாகும்.

முந்தைய ஆணைக்குழுக்கள் தீர்வு கண்டதன்படி, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மீறும் செயற்பாடுகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறும் செயற்பாடுகள் ஆகியன இடம்பெற்று வருகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக, ஓர் ஆணைக்குழுக்கு அதற்கு முந்தைய ஆணைக்குழுக்கள் அவ்வாறு கண்டறிந்த தீர்வுகளைப் பரிசீலனை செய்வதற்கான அதிகாரம் வழங்கப்படுகின்றது. அத்தகைய முடிபுகள் காணப்படின், முன்னைய ஆணைக்குழுக்கள் அப்பொறுப்பு சார்ந்து மேற்கொண்ட பரிந்துரைகளும் பொறுப்புக்கூறலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா? மற்றும் அப்பொறுப்புக்கூறல் சார்ந்த நோக்கங்களை மேலும் வளப்படுத்துவதற்கு வருங்காலத்தில் உள்வாங்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை? போன்றவற்றைக் கண்டறிவது அவ்வாணைக்குழுக்கான மேலதிக கடப்பாடாகும்.

மேலும், OMP இன் செயற்பாட்டுக்கு உகந்த வகையிலான சூழலை ஏற்படுத்துவதற்கும் OMP இல் மேற்கொள்ளப்படுகின்ற அல்லது புதிதாக வருகின்ற முறைப்பாடுகளை முறையாகப் பேணி அம்முறைப்பாடுகள் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படாதிருத்தலை உறுதிப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளையும் OMP மேற்கொண்டுள்ளது. அதற்கேற்ப, வலிந்து காணாமலாக்கப்பட்ட ஆட்கள் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனைக் கடந்த 12 மாதகாலப் பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட இடர்பாடுகளையும் மீறி இலங்கையில் நல்லிணக்கத்தை ஈட்டிக்கொள்வதற்கு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களின் குடும்பங்கள் தேடுகின்ற உண்மைக்கும் நீதிக்குமான அவர்களது உரிமைகள் உணரப்பட வேண்டும் என்பதில் OMP நம்பிக்கை பூண்டுள்ளது. அதற்காக, வருங்காலத்தில் அமையவுள்ள ஆணைக்குழுக்களும், அதிகாரிகளும் இக்கடப்பாட்டினை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அரச முகவர்களதும் திணைக்களங்களதும் பூரண ஒத்துழைப்புடன் தமது கருமங்களையும் கடமைகளையும் மேற்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக்கொள்வதற்கும் OMP உம், அதன் நிறைவேற்று உறுப்பினர்களும், அலுவலர்களும், சிவில் சமூக நிறுவனங்களும், காணாமல் போன ஆட்களின் குடும்பங்களும், பங்குதாரர்களும் பாரியதொரு அடித்தளத்தினை உருவாக்கியுள்ளனர்.

**மகேஷ் கட்டுலந்த**

தவிசாளர்,

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

## 1. முன்னுரை

இலங்கையில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) தாபிக்கப்பட்டது காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய சிக்கல் வாய்ந்ததும் ஆழ்ந்த உணர்வுபூர்வமானதுமான பிரச்சினையினைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் கொண்டுள்ள சிரத்தையைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற மகத்தான மைற்கல்லாகத் திகழ்கின்றது. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல், கருமங்களை ஆற்றுதல்) சட்டம் (OMP சட்டம்) 2016 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அது நீண்டு நிலைத்துள்ள இப்பிரச்சினையை எதிர்கொள்வதற்கு தேசம் கொண்டுள்ள அர்ப்பணிப்பினைப் படம்பிடித்துக்காட்டுகின்றது.

வினைத்திறன் மிக்க அனுசரணையினை அங்கீகரித்து 2017 ஆம் ஆண்டு OMP சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதாவது அரச சார்பற்ற நிறுவனங்களுடன் (NGOs) ஒப்பந்தங்களை மேற்கொள்வதனை அது ஏதுவாக்கியது. இச்சட்டத் திருத்தம் OMP இன் திறன்களை மேம்படுத்துவதையும் கீர்த்திமிக்க அரச சார்பற்ற நிறுவனங்களின் நிபுணர்களையும் வளங்களையும் ஒன்றிணைக்கின்ற தொடர்பினை விரிவுபடுத்துவதையும் நோக்காகக் கொண்டிருந்தது.

OMP 2018 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாகத் தாபிக்கப்பட்டது. காணாமல் போன ஆட்கள் பற்றிய அனைத்து வகையிலான வழக்குகளையும் கையாள்வதற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றும் இலங்கையின் முதன்மை நிறுவனமாக OMP தாபிக்கப்பட்டது. அரசாங்கம் வேளாவேளைக்கு அவ்வப்போது நிறுவனங்களையும் விசாரணை ஆணைக்குழுக்களையும் நிறுவுகின்ற பொறிமுறைகளைக் கடந்து நிரந்தரமானதாகவும் சுயாதீனமானதாகவும் இயங்குகின்ற ஓர் அரச நிறுவனம் என்ற நிலையை நோக்கி நிலையான மாற்றத்தை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதை இவ்வலுகம் தாபிக்கப்பட்டமை எடுத்துக்காட்டுகின்றது.

முந்தைய பொறிமுறைகள் மூலம் பெறுமதிமிக்க பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் தமது நேசத்திற்குரிய உறவுகளைத் தேடி அவர்கள்தம் எண்ணற்ற குடும்பங்கள் இடைவிடாது கேட்கின்ற கேள்விகளுக்கு மறுமொழியளிக்கும் விதமாக அவை அமையவில்லை. முரண்பாடுகள், அரசியல் கலகங்கள், சமூகவியற் குழப்பங்கள் அல்லது வலிந்து காணமலாக்கப்படுதல் ஆகிய காரணங்களுடன் தொடர்புண்டு காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட ஆட்களது விதிகளையும் அமைவிடங்களையும் தெளிவுபடுத்துவதன் மூலமாக இத்தகைய நன்கறியப்பட்ட பரந்துபட்ட ஏக்கத்தினைத் தீர்த்துவைப்பதற்கு OMP விளைந்துள்ளது.

முதலாவது தவிசாளராகிய சனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் அவர்களது வழிகாட்டலின் கீழும் இரண்டாவது தவிசாளரும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசராகிய கௌரவ உபாலி அபேரத்ன அவர்களது வழிகாட்டலின் கீழும் அதன் பின்னரான தவிசாளர் மகேஷ் கட்டுலந்த அவர்களின் வழிகாட்டுதலின் கீழும் தனது வினைத்திறன் மிக்க மற்றும் பதிலிறுக்கும் தன்மை மூலமாக அடுத்தடுத்து வந்த குழுக்களின் ஊடாக செயற்பாடுகளை மேற்கொண்டு OMP வளர்ச்சி கண்டுள்ளது. தற்சமயம் இயங்கிக்கொண்டிருக்கின்ற OMP இன் மூன்றாவது நிர்வாகக் குழு இலங்கையில் பாதிப்புற்றுள்ள காணாமல் போன ஆட்களது குடும்பங்களுக்கான உண்மை, நீதி, நல்லிணக்கம் போன்றவற்றை நாடிச் செல்கின்ற இலக்கினைத் தொடர்ந்து வருகின்றது.

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது குடும்பங்கள் நாடுகின்ற உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களை ஆற்றித்தேற்றுவதற்கும் உரிய தனது அர்ப்பணம் மிகுந்த செயற்பாட்டில் OMP பற்றுறுதியாக உள்ளது. OMP இன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதிலும் மட்டிட முடியாத இழப்புகளின் மூலம் அல்லலுற்ற

ஆட்களை அணுகுவதிலும் OMP அடைந்துள்ள மகத்தான முன்னேற்றங்கள், எதிர்கொண்ட சவால்கள், நிலையான தீர்மானங்கள் போன்றவற்றை இவ்வாண்டு அறிக்கை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றது.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட முறைப்பாடுகளிலிருந்து 6000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமான விசாரணைகளை 2023 ஆம் ஆண்டில் அதிகளவில் நடத்தியுள்ளது. ஏற்கனவே பெற்றிருந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை வினைத்திறனான முறையில் மேற்கொள்வதில் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக தலைமைக் காரியாலயத்திலும் பிராந்திய காரியாலயங்களிலும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் முதல் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வது நிறுத்தி வைக்கப்பட்டதன் பிற்பாடும் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் செயன்முறைகளை முன்நகர்த்திச் செல்வதற்கும் நாடு முழுவதிலும் 2000 விசாரணைக் குழுக்களை அமைத்து நடிவடிக்கை மேற்கொள்வதற்கின்ற செயல்வலு மிக்க ஆண்டாக 2023 ஆம் ஆண்டை ஆக்கி OMP செயற்பட்டுள்ளது.

## 2. அறிமுகம்

குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கும் கருமங்களுக்குமான செயன்முறைகளையும் வழிகாட்டல்களையும் வரையறுப்பதற்கும், காணாமல் போன ஆட்கள் பற்றிய தரவுத்தளத்தை உருவாக்குவதற்கும், காணாமல் போன ஆட்களது உறவுகளுக்கு ஆதரவு வழங்குவதற்கும், காணாமல் போன ஆட்கள் பற்றிய தேடுதலையும் அவர்களைக் கண்டறிதலையும் மேற்கொள்வதற்கும் OMP சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புபடுகின்ற அல்லது நேரிடுகின்ற அனைத்து விடயங்களையும் வழங்குவதற்கும் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல், கருமங்களை ஆற்றுதல்) சட்டம்[1] 2016 இல் நிறைவேற்றப்பட்டது. இத்தகைய நிவாரணப் பணிக்காக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்[2] சிரத்தையுடனும் ஒருங்கிணைப்புடனும் செயற்படுகின்றது. அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைப்பின் பேரில் ஏழு ஆணையாளர்களை நியமித்து தனது நடவடிக்கைகளை 28.02.2018 ஆந் திகதியன்று OMP மேற்கொண்டது.

காணாமல் போன ஆட்களைச் சூழவுள்ள சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்துவதும், காணாமல் போதல் மீண்டும் நிகழாமல் இருப்பதனை உறுதி செய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்குவதும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களினதும் அவர்களது குடும்பங்களினதும் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுக்கான பரிகாரத்தை வழங்குவதற்கான வழிவகையினை இனங்காண்பதும், கைவசம் உள்ள சகல தகவல்களையும் தரவுத்தளத்தில் ஒருமுகப்படுத்துவதும் OMP இன் கடப்பாடாகும்.[3]

மேலும், பாதிக்கப்பட்டோர் மேற்கொள்ளும் முறைப்பாடுகளை ஏற்று அவற்றுக்குக் காணப்படாமைக்கான சான்றிதழ் (CoA) வழங்குவதற்குப் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தை ஏதுவாக்குவதற்காக அது தொடர்பிலான கடிதங்களைக் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது உறவுகளுக்கு வழங்குதல், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுடைய உறவுகளுக்கு அல்லது குடும்பங்களுக்கு உளரீதியானதும் சமூகரீதியானதுமான ஆதரவு உட்பட – ஆயினும் அதற்குள் மாத்திரம் நின்றுவிடாது நிருவாகரீதியான ஆதரவினையும் நலனோம்பு சேவைகளையும் வழங்குதல் அல்லது வசதியளித்தல், காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது அவர்களுடைய உறவுகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான முறைமை ஒன்றினை விருத்திசெய்து அமுல்படுத்துதல், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுடன் தொடர்புடைய சகல விவரங்களையும் உள்ளடக்குகின்ற தரவுத்தளம் ஒன்றினை உருவாக்குதலும், முகாமை செய்தலும், பேணி வருதலும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பிலான காரணங்களையும், சம்பவங்களையும் அதன் விளைவுகளையும் பற்றிப் பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல், பொது மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் தாம் பொருளாதார ஆதரவினையும் உளரீதியான ஆதரவினையும் சமூகரீதியான ஆதரவினையும், சட்டரீதியான ஆதரவினையும், நிருவாக ரீதியான ஆதரவினையும் அணுகுவதற்குமான வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன போன்ற கருமங்களையும் கடமைகளையும் ஆற்றுவது OMP இற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளது.[4]

---

[1] இதனகத்துப் பின்னர் OMP சட்டம் என்று குறிப்பீடு செய்யப்படும்

[2] இதனகத்துப் பின்னர் OMP என்று குறிப்பீடு செய்யப்படும்

[3] OMP சட்டம். பிரிவு 10

[4] OMP சட்டம். பிரிவு 13

பால்மை ரீதியான நியமங்களையும் வழிகாட்டல்களையும் வகுப்பதற்கும், பணியாளர்களை நியமிப்பதற்கும் நீக்குவதற்கும், தனது வினைத்திறனான செயற்பாட்டுக்கு அவசியப்படும் பிரிவுகளை அமைத்துக்கொள்வதற்கும் பரந்தளவில் OMP அதிகாரம் கொண்டுள்ளது.[5] மேலும், காணாமல் ஆக்கப்படுகின்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தவிர்ப்பது பற்றிய, காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூருவதற்கும் அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டமையை ஏற்றுக்கொள்வதற்குமான வழிகளும் முறைமைகளும் பற்றிய, அடையாளங்காண முடியுமான மற்றும் அடையாளங்காண முடியாத மனித எச்சங்களைக் கையாளுதல் பற்றிய, காணாமல் போன ஆட்களது பிரச்சினைகள் பற்றிப் பொது மக்கள் அறிந்துகொள்வதற்கான தகவல்கள் வெளியீடு செய்வது பற்றியவை உட்பட பரந்துபட்ட சிக்கல்கள் தொடர்பில் ஏனைய அரச அதிகாரிகளுக்கும் பரிந்துரைகள் மேற்கொள்வதற்கும் காணாமல் போன ஆட்கள் பற்றி தேசிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் போன்றவற்றை உருவாக்குவதற்குமான பரிந்துரைகளை வழங்குவதற்கும் OMP இற்கு அதிகாரம் உண்டு.[6]

OMP தனது புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கான நோக்கம் கருதி முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும், விசாரணைகளை மேற்கொள்வதற்கும் காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது அமைவிடங்களைத் துலக்குவதற்கும் அச்சட்டம் OMP இற்கு அதிகாரம் அளித்துள்ளது. OMP இல் பிரசன்னமாகுமாறு எவருக்கேனும் அழைப்பாணை அனுப்புதல் அல்லது ஏதேனும் ஆவணம் அல்லது பொருள் சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள்விடுத்தல், உணர்ச்சியைக் கிளப்புகின்ற தகவல்களைத் தனிப்பட்ட வகையில் ஏற்றுக்கொள்வதற்கான செயன்முறை ஒன்றை உருவாக்குதல், இரகசியம் பேணுதல் வேண்டும் என்னும் நிபந்தனையின் கீழ் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், அகழ்வுப் பணியின்போதான ஒரு கண்காணிப்பளராக செயற்படுகின்ற அதேவேளை அகழ்வுப் பணி ஒன்றை மேற்கொள்வதற்கான அனுமதியை நாடி நீதிவான் நீதிமன்றம் ஒன்றுக்கு விண்ணப்பம் மேற்கொள்ளுதல், ஏதேனும் அரச துறையின் துணையை நாடி வேண்டுகோள்விடுத்தல், ஆணை எதுவுமின்றி ஏதேனும் தடுப்புக் காவல் தலத்தினைத் தேடுதல், குறித்த சட்டம் ஒன்றை அமுல்படுத்துகின்ற வேளையில் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை அறிக்கையிடல் அல்லது முறையாகக் கவனம் செலுத்தப்பட்டதன் பின்னர் ஓர் அதிகாரிக்கு எதிராக வழக்குத்தொடருதல் உட்பட சம்பந்தப்பட்ட விடயங்களைப் பரிசீலனை செய்வதற்கு அவசியப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் அச்சட்டம் OMP இற்கு அதிகாரம் வழங்கியுள்ளது.[7]

### 3. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் நோக்கங்கள்:

அவசியப்படுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துதல்:

அ) காணாமல் போன ஆட்களைத் தேடுவதற்கும் கண்டறிவதற்குமான பொருத்தமான பொறிமுறைகளை வழங்குதல் மற்றும் அத்தகைய ஆள் காணாமல் போனமைக்கான சூழ்நிலைகளை விளக்குதலும் அவர்களது விதிகளைத் தெளிவுபடுத்துதலும்

ஆ) சட்டத்தின் விளக்கத்தின்பாற்பட்டு 'காணாமல் போன ஆட்கள்' பற்றிய சம்பவங்களைக் குறைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை வழங்குதல்

---

[5] OMP சட்டம், பிரிவு 11

[6] OMP சட்டம், பிரிவு 13(1) (ஓ)

[7] OMP சட்டம், பிரிவு 12

இ) சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டவாறு காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது உறவுகளது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்தல்

ஈ) அத்தகைய காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது உறவுகள் பரிகாரம் பெற்றுக்கொள்வதற்கான நிவாரண வழிகளைத் தகுந்தவாறு இனங்காணுதல்.

## 4. கடப்பாடு

அ) காணாமல் போன ஆட்களைத் தேடுதலும் கண்டறிதலும் மற்றும் அவர்களுக்கான பொருத்தமான பொறிமுறைகளை இனங்காணுதல் மற்றும் அத்தகைய ஆள் காணாமல் போனமைக்கான சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்துதல்,

ஆ) காணாமல் போன ஆட்கள் பற்றிய சம்பவங்களைத் தீர்த்துக்கொள்வதற்கான பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்குதல்

இ) காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களின் உறவினர்களது உரிமைகளையும் நலன்களையும் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டவாறு பாதுகாத்தல்

ஈ) காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு உரித்துடைய பரிகாரங்களை வழங்குவதற்கான வழிவகைகளை இனங்காணுதல் மற்றும் அது குறித்து அந்தக் காணாமல் போன ஆளுக்கு (உயிருடன் இனங்காணப்படின்) அல்லது அந்தக் காணாமல் போன ஆளின் உறவினருக்குத் தகவல் வழங்குதல்.

உ) காணாமல் போன ஆட்கள் பற்றி தற்சமயம் மேற்கொள்கின்ற செயன்முறை மூலமாகப் பெறப்படுகின்ற தகவல்களை அல்லது ஏனைய நிறுவனங்கள், நிறுவகங்கள், அரசாங்கத் திணைக்களங்கள், விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் முந்தைய செயன்முறைகள் மூலமாகப் பெற்றுக்கொண்ட தரவுகளை ஒன்றுதிரட்டுதலும் OMP சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தரவுத்தளத்தில் கைவசம் உள்ள தரவுகளை ஒருமுகப்படுத்துதலும்

ஊ) சட்டத்தின் கீழ் ஈட்டிக்கொள்ளத்தக்க அவசியப்படுகின்ற நோக்கங்கள் அனைத்துக்கும் தேவையான விடயங்களை மேற்கொள்ளுதல்

போன்ற கடப்பாடுகளை OMP கொண்டுள்ளது.

மேலும், காணாமல் போன ஆள் ஒருவர் அவ்வாறு காணாமல் போன காலப்பகுதி எது எவ்வாறிருப்பினும் அத்தகைய காணாமல் போன ஆள் குறித்து OMP கொண்டுள்ள கடப்பாடு பரந்துபட்டு அமைதல் வேண்டும்.

## 5. தூர நோக்குகளும் நிறுவனஞ்சார் முன்னுரிமைகளும் (செயலாற்றற் கொள்கைகள்)

OMP இனால் 2023-2025 வகுக்கப்பட்ட இலக்குத் திட்டத்தின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக் கொள்கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தூர நோக்கும் பணிக்கூற்றும்

| எமது தூரநோக்கு | *சகலரும் நீதியை அனுபவிக்கக்கூடியதும் நல்லிணக்கச் செயன்முறை வளம்பெற்றதுமான ஒரு தேசம்* | | |
|---|---|---|---|
| எமது பணிக்கூற்று | *தேசிய நல்லிணக்கப் பொறிமுறையின் ஓர் அங்கமாக காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களதும் அவர்களுடைய உறவுகளதும் உரிமைகளைப் பாதுகாத்தல்* | | |
| அடிப்படையான அடைவுகள் | அடைவு 1: (நோக்கம்) | அடைவு 2: | அடைவு 3: |
| எதிர்காலத்தில் ஆட்கள் காணாமல் போவது மற்றும் காணாமல் ஆக்கப்படுவது மீண்டும் நிகழாமை மற்றும் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட மக்களது உரிமைகளை உறுதிப்படுத்தல் | தடுப்பு நடவடிக்கைகள்<br><br>சிறுவர்கள், இளையவர்கள், இளவயதினர் போன்றோர் மீண்டும் மீண்டும் காணாமல் போவதுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் குறித்து தடுப்பு உபாயங்கள் மேற்கொள்வதன் மூலமாகவும், கல்வியூட்டுவதன் மூலமாகவும் முற்காப்புத் தலையீடு மூலமாகவும் கணாமல் போகின்ற ஆட்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் | பாதுகாப்பு நடவடிக்கைகள்<br><br>சிறுவர்கள், இளையவர்கள், இளவயதினர் போன்றோர் காணாமல் போவதுடன் தொடர்புபட்ட சம்பவங்களுக்கு உள்ளூர் முகவர்கள் ஒழுங்கமைந்த வகையிலான இடர்வரைவு எதிர்வினையாற்றுவதன் மூலம் காணாமல் போபவர்களுக்கான தீங்கியல் இடர்களைக் குறைத்தல் மற்றும் அம்முகவர்கள் அத்தகைய ஆளைக் கண்டறிவதற்கு இணைந்து செயலாற்றுதல், உள்நாட்டு ரீதியாகவும் சர்வதேய ரீதியாகவும் முடிந்தளவு விரைவாக வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வருதல் | பரிகாரம் வழங்குவதற்கான ஏற்பாடு<br><br>உடனுக்குடன் தொடர்புகொண்டு காணாமல் போனவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்குமான ஆதரவினை வழங்குதல் மற்றும் எவ்வாறு?, எங்கே? உதவியை நாடி ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை காணாமல் போனவர்களும் அவர்களது குடும்பங்களும் புரிந்துகொள்வதை உறுதிப்படுத்தல் |

## 6. OMP இன் வியாபகம்

கொழும்பு நகரத்தில் தலைமை அலுவலகத்தையும் பிராந்திய மற்றும் துணைப் பிராந்திய அலுவலகங்களையும் கொண்டு நாடு முழுவதிலும் OMP இயங்குகின்றது. பிராந்திய அலுவலகங்கள் 12 அமைக்க வேண்டும் என்பது OMP இன் கடப்பாடாக இருக்கின்ற போதிலும் தற்சமயம் பிராந்திய அலுவலகங்கள் ஐந்தையே OMP கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று இவ்வறிக்கை ஆண்டில் கிளிநொச்சியில் நிறுவப்பட்ட பிராந்திய அலுவலகமாகும்.




பிராந்திய அலுவலகம் - மட்டக்களப்பு

இல. 124, மத்திய வீதி, மட்டக்களப்பு

தொ.பே: 065-222-4532/ 4534

பிராந்திய அலுவலகம் - யாழ்ப்பாணம்

இல. 124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

தொ.பே: 021-2219414/ 9401

பிராந்திய அலுவலகம் - மன்னார்

இல. 5, நிலைய வீதி, மன்னார்

தொ.பே: 023-2222083

பிராந்திய அலுவலகம் - மாத்தறை

இல. 54, தர்மாராம வீதி, மாத்தறை

தொ.பே: 041-2224046

பிராந்திய அலுவலகம் - கிளிநொச்சி

ஏ9 வீதி, நீதி மன்ற அருகாமை, கிளிநொச்சி

தொ.பே: 021-2219400

## 7. நிகழ்வுகள் சார்ந்த இற்றைப்படுத்தல்

2023 ஆம் ஆண்டிற்குரிய மூலோபாயத் திட்டத்தினை மீள்பரிசீலனை செய்ததை அடுத்து OMP இன் தவிசாளர் அவர்களுடைய வழிகாட்டுதலின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்குரிய நிகழ்வுகள் சார்ந்த மூலோபாயமாகப் பின்வருவன அமைந்திருத்தல் வேண்டும் என்று OMP ஒழுங்கமைத்துள்ளது.

தவிர்ப்பு நடவடிக்கைகள் - ஆட்கள் காணாமல் போகின்ற எண்ணிக்கையினை விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் குறைத்தல் மற்றும் மீண்டும் மீண்டும் சிறுவர்களும் இளையவர்களும் இளவயதினர்களும் காணாமல் போகின்ற சம்பவங்களை ஆரம்பத்திலேயே தலையீடு செய்தல்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் - காணாமல் போன ஆளைக் கொண்டு வந்து சேர்ப்பதற்காக உள்ளூர் முகவர்கள் இலக்குள்ள, இடர்வரைவு கொண்ட நடவடிக்கைகளை வழங்குவதனை உறுதிப்படுத்துவதன் மூலமாக ஆட்கள் காணாமல் போவதற்கான தீங்கு இடர்கள் மட்டுப்படுவதை நிர்ணயித்தல் மற்றும் உள்நாட்டு அளவிலும் சர்வதேய அளவிலும் வழக்குகளை விரைவாகப் பூர்த்தி செய்தல்.

நிவாரணம் வழங்குதல் அல்லது பரிகாரம் வழங்குதலுக்கான நடவடிக்கைகள் - காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் தாம் உதவியையும் ஆதரவையும் எங்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கான வகையில் விரைவாகத் தொடர்புகொண்டும் உறுதிப்படுத்தியும் செயற்படுவதன் மூலமாகக் காணாமல் போன ஆட்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஆதரவினையும் வழிகாட்டலையும் வழங்குதல்.

OMP இற்குக் கிடைத்து வருகின்ற அதிகரித்த அளவிலான ஆதரவு மற்றும் இலங்கைக்கு உள்ளேயும் இலங்கைக்கு வெளியிலும் உள்ள பலதரப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுடன் OMP கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்கள் ஆகியன இவ்வருடம் முழுவதும் OMP பின்பற்றியுள்ள சிரத்தையின் தாக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

## 8. சட்டம், கொள்கை, ஆய்வுப் பிரிவு

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களதும் அவர்களது உறவுகளினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது உறவினர்கள் பொருளாதார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், சட்டரீதியாகவும் நிருவாக ரீதியாகவும் ஆதரவை அணுகுவதற்கான வசதிகளை மேற்கொள்ளுவதற்கும் OMP கடப்பாடுடையதாகும்.[8] மேலும், காணாமல் ஆக்கப்படுகின்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தவிர்ப்பதை உறுதிப்படுத்துவதற்கும், மனித எச்சங்களைக் கையாளுதல் பற்றியும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களினதும் மற்றும் அவர்களது உறவினர்களதும் சமூக பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கும் அரச அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை வழங்குவதற்கு OMP அதிகாரம் பெற்றுள்ளது.[9]

மேற்குறித்த கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக காணப்படாமைக்கான சான்றிதழ்கள் குறித்த சட்டரீதியானதும் கொள்கை ரீதியானதுமான பரிந்துரைகளை OMP மேற்கொண்டுள்ளதுடன் காணப்படாமைக்கான சான்றிதழ்கள் தொடர்பில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களது குடும்பங்கள் அக்காணப்படாமைக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு இடைக்கால அறிக்கைகளை வழங்கியும், மனித எச்சங்களை விசாரிப்பதற்கான நியாயாதிக்க அதிகாரத்தினைப் பிரயோகித்தும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுடைய குடும்பங்களுக்கான நிவாரணத்தினை வழங்கியும், தனிப்பட்ட ஆட்கள் சட்ட மற்றும் நிருவாக உதவியை நாடி மேற்கொண்டிருந்த வேண்டுகோள்களுக்கு மறுமொழி அளித்தும் OMP செயற்பட்டுள்ளது.

சட்டம், கொள்கை மற்றும் ஆய்வுப் பிரிவானது 2023 ஆம் ஆண்டில் விசாரணைகளையே அதிகளவில் மேற்கொண்டுள்ளது. விசாரணைகளை நடத்திச் செல்கின்ற செயன்முறையினை இலகுவாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றிக்கொள்வதற்கு 2023 பெப்ரவரி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை[10] பாகம் பாகமாக வகைபிரித்து இப்பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அத்தகைய பாக ரீதியான வகைப்பாடு பின்வருமாறு

1. பாகம் 1: 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான முறைப்பாடுகள் அனைத்தும்
2. பாகம் 2: 1999 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முறைப்பாடுகள் அனைத்தும்
3. பாகம் 3: 1989 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட முறைப்பாடுகள் அனைத்தும்

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற விசாரணைகளில் பாகம் 1 ஐச் சேர்ந்த வகைப்பாடே உச்சபட்ச அளவில் காணப்படுகின்றது. ஏனெனில் பாகம் 1 வகைப்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகளுள் அதிகமானவை அண்மித்தவையாகவும், அவற்றின் ஆவணப்படுத்தல் உள்ளபடி உள்ளவாறே காணப்படுவதுடன் கண்டறியத்தக்க வகையிலும் காணப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்கள் அனைத்தையும் உள்ளடக்கி அவ்வப் பிராந்தியங்களிலும் தலைமை அலுவலகத்திலுமாக 2000 இற்கும் மேற்பட்ட விசாரணைகளை வெற்றிகரமாக OMP நடத்தியுள்ளது. வரும் ஆண்டுகளிலும் வினைத்திறனான வகையில் தனது முனைப்புகளைத் தொடர்வதற்கு நாட்டம் கொண்டுள்ளது. பெருந்தொற்று, நீண்ட கால முடக்கம் மற்றும் தனிமைப்படுத்தல் போன்றவற்றிலிருந்து நாடு மீண்டு வழமைக்குத் திரும்பிக்கொண்டிருந்த அதேவேளை வெளி மாவட்டங்களில் அதிகளவில் விசாரணைகளை நடத்துவதற்கு பெற்றுக்கொண்ட வாய்ப்பு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. அகழ்தல், ஆராய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பிலான நியமமான நடைமுறை விதிகளானவை சட்ட வைத்திய அதிகாரிகள், அமைச்சு அதிகாரிகள், சட்டமா அதிபர் அலுவலகம் ஆகியவர்களுடன் ஒன்றிணைந்து தயாரிக்கப்பட்டது. அவர்களுடன்

[8] OMP சட்டம், பிரிவு 2 (ஆ), 10 (இ), 13 (உ)
[9] OMP சட்டம், பிரிவு 13 (ஓ) (i), (iii), (viii)
[10] OMP சட்டம், பிரிவு 12

சேர்ந்து அரச செயற்பாட்டாளர்களுடனும் சிவில் நிறுவனங்களுடனும் பங்காண்மையினை OMP விருத்திசெய்துள்ளது.

13 மனிதப் புதைகுழிகளுள் முதன்மையானவையாகக் காணப்படுகின்ற கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்ற புதைகுழிகள் தொடர்பிலான தடயவியல் பரிசோதனைகள் சம்பந்தப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபாட்டைக் காட்டி OMP பங்காற்றியுள்ளது. மேலும், ஐக்கிய நாடுகள் தாபனம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளைப் போன்ற இலங்கை அரசாங்கத்தில் காணப்படுகின்ற முன்னணி சுயாதீன அரச நிறுவனங்களை உள்ளடக்கி செயற்படுகின்ற பாராளுமன்ற தெரிவுக் குழுவுடன் சிறந்த பிணைப்பை ஏற்படுத்த ஏதுவான வகையில் OMP செயற்பட்டு வருகின்றது. இற்கும் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கையின் விளைவாக விசாரணைகளில் மக்கள் பங்குபற்றுவது அதிகரித்துள்ளமை OMP இற்குக் கிடைத்த மற்றுமொரு உறுதுணையாக அமைந்துள்ளது. விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ள மக்களுள் 92% இற்கும் அதிகமான மக்கள் விசாரணை செயற்பாட்டில் பங்குபற்றியுள்ளமை இதற்கான சான்றாகப் புலப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்றைப் வழக்கு ஒன்றில் மனித எச்சங்கள் பற்றிய நீதிவான் விசாரணைகளில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களின் குடும்பங்களின் உரிமைகளுக்காகக் கொள்கையளவில் OMP ஆதரவளித்துள்ளதுடன் அவ்விசாரணைகளுக்கு சட்டத்தரணிகளை வைத்தும் OMP .தனது பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளது. மேலும் சட்டமா அதிபரின் திணைக்களத்துடன் சேர்த்து எதிராளிகளுள் ஒருவராகவும் OMP குறிப்பிடப்படுகின்றது. மனித எச்சங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு குடும்பங்கள் பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. அது நீதி நிர்வாகம் வினைத்திறனான முறையில் இயங்குவதற்கு அதிதியாவசியமானதாகும். ஏனெனில் விசாரணைகளை நடத்துவதற்கு அவசியப்படுகின்ற மிக முக்கியம் வாய்ந்த தகவல்களை குடும்பங்கள் வழங்கக்கூடும். மேற்குறித்த விடயம் தொடர்பில் குறித்த விடயம் தொடர்பிலான சர்வதேச நியமங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட காரணங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வவுனியாவில் உள்ள மாகாண மேல் நீதிமன்றம் இன் விண்ணப்பத்தை அறிவார்ந்த ரீதியில் கவனத்திற்கொண்டுள்ளது.

### ய. விசாரணைச் செயன்முறை

OMP இன் சட்டம், கொள்கை மற்றும் ஆய்வுப் பிரிவானது அலுவலகத்தின் செயற்பாட்டின் ஓட்டத்தையும் தகவல்களின் ஓட்டத்தையும் இலகுபடுத்தும் வகையில் விசாரணைக்கு முற்பட்டவை என்றும் விசாரணைக்குப் பிற்பட்டவை என்றும் செவ்வை பிரித்தல் செயன்முறை ஒன்றை உள்வாங்கி செயற்படுகின்றது.

ஆதரவு வழங்குதல் பிரிவினால் பாதிக்கப்பட்டவர் சார்பில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்படின் அம்முறைப்பாட்டுக்கென்று பிரத்தியேக கோப்பு ஒன்று ஒதுக்கப்படும். அக்கோப்பில் அம்முறைப்பாட்டின் அடிப்படைத் தகவல்களும் குறிப்பிட்ட விடயம் சார்ந்த ஆவணங்களும் உள்ளடக்கப்படும். முறைப்பாட்டாளரின் மாவட்டம் சார்ந்து கோப்பு பேணப்படும். விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அக்கோப்பு தரவு முகாமைத்துவப் பிரிவினால் விசாரணைக் குழுவிடம் தீர்வு நாடி முன்வைக்கப்படும். மேற்குறித்தவாறு ஒரு கோப்பு செயன்முறைப்படுத்தப்பட்டால் முறைப்பாட்டாளருக்கு விசாரணை நடைபெறவுள்ள தினம், இடம் குறித்துத் தெரியப்படுத்திக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு தொலைபேசி அழைப்பு ஊடாகவும் அவருக்கு நினைவுபடுத்தல் ஒன்று மேற்கொள்ளப்படும்.

விசாரணைக் குழுமம் வழக்கமாக 03 தொழில்சார் நிபுணர்களைக் கொண்டு அமையும். அதில் ஒருவர் தலைமைதாங்கி விசாரணை நடத்துவதுடன் ஏனையோர் தகுதிவாய்ந்த சட்டத்தரணியாகவோ அல்லது தீவளாவிய சேவைகளிலிருந்து (இளைப்பாறியவராக இருப்பினும் அல்லது சேவையிலிருப்பவராக இருப்பினும்) நிருவாக சேவை அலுவலராக

அல்லது அலவுலர்களாகக் குழுமத்தில் காணப்படுவர். விசாரணைக் குழுமங்களுக்குத் தலைமை தாங்கும் அதிகாரிகள் சட்டம் /விசாரணை அகிய துறைகளில் துறைசார்ந்தவர்களாகக் காணப்படுவதுடன் இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக விசாரணைகளை ஒரேயடியாக மேற்கொள்வதற்கு குழுமங்கள் விளையும். இலங்கையின் பொருளாதார நிலைமையினைக் கருத்திற்கொண்டு பாரிய எண்ணிக்கையிலான விசாரணைகளை நடத்துவதற்கு விசாரணைக் குழுமங்கள் விளைந்துள்ளன.

விசாரணைக் குழு பின்னர் காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான சம்பவம் பற்றிய தகவல்களை சேகரிக்கும். இதில் காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான தகவல்கள், அவர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட அல்லது கடைசியாகப் பார்த்த நாள்/சம்பவம் பற்றிய தகவல்கள் ஆகியவை உள்ளடங்கும். காணாமல் போனவரின் உறவினர்கள் மற்றும் முறைப்பாட்டாளர் வழங்கிய தகவலின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், விசாரணையின் போது முறைப்பாட்டாளருடன் மேலதிகமாக சாட்சிக்காரர் ஒருவரை ஆஜராகுமாறு விசாரணைக் குழுக்கள் கோருகின்றன, மேலும் முறைப்பாட்டாளரிடம் சமர்ப்பணம் பெறப்பட்ட பிறகு சாட்சிகள் தனித்தனியாக விசாரிக்கப்படுகிறார்கள். விசாரணைக்குப் பிறகு, முறைப்பாட்டாளருக்கு விசாரணைக்குழு பரிந்துரைகளை அனுப்புகிறது. COA (காணப்படாமைக்கான சான்றிதழ்), மறுமலர்ச்சி கொடுப்பனவுகள், காணி அல்லது வீடமைப்பு மற்றும் பிற உளவியல்-சமூக உதவி போன்ற சட்டக் ரீதியான உதவிகளை வழங்குவதை உள்ளடக்கிய - ஆனால் அவை மட்டும் அல்லாத - தற்காலிக அனுசரணைகள் அளிக்கப்படுகின்றன.

அதன்படி, இந்த விசாரணைச் செயற்பாட்டின் போது பின்வரும் மூன்று வகையான காணாமல் போனவர்கள் பற்றிய வகைபீடுகள் OMP ஆல் கருத்திற்கொள்ளப்படுகின்றன, அவை OMP இன் கடப்பாடும் ஆகும்.

1. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடந்த மோதலின் விளைவாக அல்லது அதன்பின்னர் காணாமல் போன ஆட்கள் அல்லது அது தொடர்பாக அல்லது "இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போனவர்" என்று அடையாளம் காணப்பட்ட ஆயுதப் படைகள் அல்லது காவல்துறையின் உறுப்பினர் அல்லது

2. அரசியல் கலகம் அல்லது பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்பங்கள் மூலம் காணாமல போனவர்

3. "வலிந்து காணாமலாக்கப்படுதலிருந்து அனைத்து ஆட்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயத்தில்" வரையறுத்துள்ளபடி வலிந்து காணமலாக்கப்பட்டவர்[11]

முறைப்பாடுகள் OMP இன் கடப்பாட்டுக்கு உட்பட்டவையாக உள்ளதா இல்லையா என்பதை விசாரணை அறிக்கைகள் முடிவுறுத்தி அவர்கள் வழங்கிய பரிந்துரைகளைச் சேர்த்து அதன் பின்னர் கோப்புகள் சட்டப் பிரிவுக்குப் மீண்டும் பாரப்படுத்தப்படும். விண்ணப்பதாரர்கள், சாட்சிகள், விசாரணைக்குழு உறுப்பினர்கள், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகம் ஆகியவற்றுடன் இணைந்து ஒருங்கிணைத்தல், தளவாட ஏற்பாடுகள், விசாரணைகளை திட்டமிடுதல், அழைப்புக் கடிதங்களை அனுப்புதல் மற்றும் நினைவூட்டல்களைத் தொடர்தல் உள்ளிட்ட முழு விசாரணை செயன்முறையையும் சட்டப் பிரிவு முக்கியமாக கவனிக்கிறது. மேலும், விசாரணை செயல்முறையை ஊக்குவிக்கும் வகையில், விண்ணப்பதாரர்களுக்கும் சாட்சிக்காரர்களுக்குமட அவர்கள் பங்கேற்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பின்னர், VFSO மற்றும் கண்டறிதல் குழு ஆகியோர் காணாமல் போன ஆட்களது கோப்புகளைக் கையாளுகின்றனர்.

[11] 2016 ஆம் ஆண்டின் OMP சட்டத்தின் பிரிவு 27

### 8.2 சவால்கள்

இக்காலப்பகுதியில் விசாரணைகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் OMP எதிர்கொண்ட பிரதான சவால்களுள் ஒன்றே விசாரணைகள் நடைபெறுகின்ற இடங்களுக்கு முன்பாக இனந்தெரியாத ஆட்களும் குழுக்களும் அடுத்தடுத்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களாகும். முறைப்பாட்டாளர்களை விசாரணைகளில் கலந்துகொள்ளவிடாது அக்குழுக்கள் மிகக்கடுமையாக அவர்களைத் தடுத்துள்ளனர். நட்டஈடு, இழப்பீடுகள் தொடர்பில் சர்வதேச நீதி வேண்டிக் கோரிக்கை விடுகிகின்ற தவறான கருதுகோளே அத்தகைய நியாயபூர்வமற்ற ஆர்ப்பாட்டங்களுக்கான காரணங்களாகும். அவ்வார்ப்பாட்டங்களுக்கு மத்தியிலும் சிற்சில சந்தர்ப்பங்களில் அமைதியான முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் விசாரணைச் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலதிகமாக, சில முறைப்பாட்டாளர்கள் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறியுள்ளமையையும் OMP இனங்கண்டுள்ளது. அதாவது ஆவணங்களை வழங்குவது தொடர்பில் அம்முறைப்பாட்டாளர்களிடம் தமது முறைப்பாடுகளுக்கு மேலும் வலுச்சேர்க்கின்ற போதிய அளவிலான துணைசேர் ஆவணங்கள் காணப்படாமை ஒரு குறைபாடாக இனங்காணப்பட்டுள்ளது. இதன்விளைவாக எதிர்பார்க்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவது பாதிப்படைந்துள்ளது.

### 8.3 முன்னேற்றம்

பாகம் 1 இல் வகை பிரிக்கப்பட்ட மொத்த முறைப்பாடுகள் 6,025 ஆகும். 31.12.2023 வரையில் 5,791 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2,832 முறைப்பாடுகள் 2023 இற்குள் நிறைவடைந்துள்ளன. விசாரணைக் குழாம் மேற்கொண்ட பரிந்துரைகளின் விவரம் வருமாறு,

| விசாரணைக் குழாமின் பரிந்துரைகள் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| குடும்ப மீட்சிக்கான கொடுப்பனவு | 2,252 |
| சட்டரீதியான ஆவணங்களுக்கான அனுசரணை வழங்குதல் | 1,565 |
| கண்டறிதல் / தேடுதல் மற்றும் மேலதிக விசாரணைகள் | 587 |
| குடும்பங்களுக்கான ஆதரவு வழங்குதல் | 257 |

அவ்விசாரணைகளின் பின்னர் 718 கோப்புகள் பதிவாளர் நாயகத்துக்குப் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 2,101 கோப்புகள் இழப்பீடுகளுக்கான அலுவலகத்துக்கு பரிந்துரைகள் மேற்கொண்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் பாகம் 1 இன் கீழ் இன்னும் 1,221 முறைப்பாடுகள் தொடர்பிலான (சமுகமளிக்காதுள்ள 1,111 கோப்புகள் உட்பட) விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. அவை அடுத்த ஆண்டுகளில் முழுமையாக நிறைவு செய்யப்படும்.

சட்டப் பிரிவு விசாரணைகளைத் தொடங்குவது முதல் பரிந்துரைகளை அவை முடிந்த பிறகு செயல்படுத்துவது வரை அனைத்து நடவடிக்கைகளையும் கையாளுகிறது. சட்டம், கொள்கை மற்றும் ஆய்வுப் பிரிவே பெரும்பாலும் 2023 ஆம் ஆண்டில் விசாரணைகளைக் கையாண்டது. அதன்படி, சட்ட மற்றும் கொள்கை சார்ந்த பரிந்துரைகள் மற்றும் அதன் பணிகளை OMP செய்து வருகின்றது. சட்டப் பிரிவு விசாரணைகள் மூலம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகிறது. விசாரணைகளுக்கான கோப்புகளைத் தயாரித்தல், அதன் ஆவண உள்ளடக்கங்களை மதிப்பாய்வு செய்தல் ஆகியவற்றின் மூலம் விசாரணைகளைத் தொடங்குதல் மற்றும் விசாரணைக்கு அவற்றைத் தயாரித்து அவற்றை உரிய பிராந்திய

அலுவலகங்களுக்கு விநியோகித்தல், விசாரணைகள் நடைபெறும் பிரதேச அலுவலகங்களைத் தொடர்புகொண்டு பௌதீக ஏற்பாடுகளைச் செய்தல், விசாரணைகளில் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் பிரதேச பதிவாளர்களின் பங்களிப்பை உறுதி செய்தல் ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும்.

விசாரணையில் பங்கேற்கும் அதிகாரிகளின் தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்து தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்காக விசாரணைகளை ஆரம்பித்து முடித்த பிறகு கோப்புகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் பரிசீலித்து தேவையான சட்ட உதவிகளைப் பெறுவதன் மூலம் விசாரணைகளை சுமூகமாக நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளைத் திறம்பட நிர்வகிப்பதற்கான நோக்கத்திற்காக கோப்புகள் 02 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன, மேலும் விசாரணைகளை எளிதாகவும் வினைத்திறனுள்ளதாகவும் கையாளும் மேற்கொள்ளத்தக்க வகையிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய வகையீடு பின்வருமாறு அமைகின்றது:

1. கட்டம் 1: 2000 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட முறைப்பாடுகள் அனைத்தும்
2. கட்டம் 2: 1980-2000 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட முறைப்பாடுகள் அனைத்தும்
3. கட்டம் 3: 1980 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட முறைப்பாடுகள் அனைத்தும்

கட்டம் 1-ஐச் சேர்ந்த கோப்புகள் முதலில் விசாரிக்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் 06 மாகாணங்களில் (வடக்கு, கிழக்கு, மேல், மத்திய, வடமேற்கு மற்றும் சப்ரகமுவ) மொத்தம் 2,832 கோப்புகள் விசாரிக்கப்பட்டுள்ளன.

தலைமை அலுவலகத்தில் உள்ள கோப்புகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் உள்ள கோப்புகள் ஆகியன அவற்றின் ஆவண உள்ளடக்கம் மற்றும் முறைப்பட்டாளரின் சட்டபூர்வ நிலை ஆகியவற்றைச் சரிபார்த்து விசாரணைக்குத் தயார் செய்யப்படுகின்றன. விசாரணைகளுக்கான அழைப்புக் கடிதங்கள், பிராந்திய அலுவலகங்கள் ஊடாக முறைப்பாடு செய்பவர்களுக்கும் விசாரணைகளுக்கான அழைப்புக் கடிதங்கள் அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம உத்தியோகத்தர்கள் ஊடாகவும் அனுப்பி வைக்கப்படுகின்றன. விசாரணைக்கான அழைப்புக் கடிதங்கள் மூலம் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் விசாரணைக்கு சமுகமளிக்குமாறு முறைப்பாட்டாளர்கள் அழைக்கப்படுவார்கள்.

விசாரணைக் குழுக்கள் பொதுவாக 03 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். தெரிவுச் செயன்முறையின் அடிப்படையில்[12] அவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றார்கள். குழுவிற்கு ஒரு விசாரணையாளர் தலைமைதாங்குவதுடன் ஏனையவர்கள் அவருக்குத் துணைபுரிகின்றனர். குழுவின் தலைவர் சட்டப்பிரிவின் பரிந்துரையின் பேரில் நிர்வாக சபையின் அனுமதியுடன் நியமிக்கப்படும் சட்டம்/ புலனாய்வுத் துறைகளில் சிறந்து விளங்குகின்ற ஆட்களாக இருப்பர். இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக மொத்தமாக விசாரணைகளை நடத்த விசாரணைக் குழுக்கள் முயற்சிக்கும்.

அதன்பின்னர், காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் காணாமல் போனமையைச் சூழவுள்ள சம்பவம் பற்றிய தகவல்களை விசாரணைக் குழு சேகரிக்கிறது. காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆள் பற்றிய தனிப்பட்ட தகவல்கள், காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட மற்றும் கடைசியாகப் பார்த்த நாள் பற்றிய தகவல்கள் போன்றவை இதில் அடங்கும். காணாமல் போனவரின் உறவினர்கள் மற்றும் முறைப்பாட்டாளர் வழங்கிய தகவலின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விசாரணையின் போது, முறைப்பாட்டாளர் சம்பவத்தை உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியை முற்படுத்த வேண்டும். முறைப்பாட்டின் சட்டப்பூர்வ

[12] இது OMP இனால் தயாரிக்கப்பட்டு கொள்கை ஆவணமாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

செல்லுபடியாகும் தன்மை மற்றும் பிற நடை-முறை விடயங்கள் விசாரணையின் போது கவனிக்கப்படுகின்றன.

விசாரணைக் குழுக்கள் விசாரணையின் போது முறைப்பாளருடன் ஒரு மேலதிக சாட்சியையும் கோரும். முறைப்பாட்டாளரின் சமர்ப்பணம் நிறைவடைந்த பிறகு சாட்சிகள் தனித்தனியாக விசாரிக்கப்படுவார்கள், மேலும் வழங்கப்படும் தகவல் ஒருவருக்கொருவர் ஒத்தழசைவானதாக இருப்பதை உறுதிசெய்ய அதே கேள்விகள் சாட்சிகளிடத்திலும் கேட்கப்படும்.

விசாரணையின் போது விசாரணைக் குழுவிடம் முறைப்பாட்டாளர்கள் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளின் அடிப்படையில் கோப்புகளுக்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்படும். முறைப்பாட்டாளருக்கு OMP மூலம் எத்தகைய ஆதரவு வழங்கப்பட வேண்டும் என்பதை விசாரணைக் குழு முடிவு செய்யும். தற்காலிக ஆதரவுகளாக COA காணப்படாமைக்கான சான்றிதழ்), COD (இறப்புச் சான்றிதழ்), இழப்பீடுகள் அல்லது மீட்சிக்கான கொடுப்பனவுகள் மற்றும் பிற உளவியல்-சமூக உதவிகள் போன்றவை அவற்றுள் அடங்கும்.

பின்னர் விசாரணைக் குழு இரகசிய அறிக்கையைத் தாக்கல் செய்கிறது. இந்த அறிக்கை ஒருமித்த ஒப்பந்தத்தினூடாக உருவாக்கப்படுகின்றது. இது குழு உறுப்பினர்கள் தங்களது நம்பிக்கையின்மையை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும். இது நடைமுறையில் அரிதான நிகழ்வாகும்.

விசாரணையின் பின்னர் விசாரணைக் கோப்புகள் சட்டப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு, கோப்புகளிலுள்ள அவர்களின் பரிந்துரைகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டதன் பிறகு மேல் நடவடிக்கைக்காக VFSO பிரிவிடம் ஒப்படைக்கப்படும். விசாரணைகளின் அறிக்கைகள் OMP இன் கடப்பாட்டுக்கு உட்பட்டவையா என வகைப்படுத்தப்பட்டு, அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளைச் சேர்த்தவுடன், கோப்புகள் சட்டப் பிரிவுக்கு மீண்டும் அனுப்பப்படும். தரவுத்தள புதுப்பிப்புகள் முடிந்ததும், விசாரணைக் குழுவுக்கு அவர்களின் நேரம் மற்றும் முயற்சிக்குப் போதுமான அளவு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

விசாரணைகள் மற்றும் அவற்றின் உள்ளடக்கங்களை மதிப்பாய்வு செய்து அவர்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த சிறிது காலம் எடுக்கும், இங்கு கவனிக்க வேண்டிய

**8.4 சவால்கள்**

ஒரு விடயம் என்னவென்றால், எமது அலுவலகத்தில் பணியாளர்கள் குறைவாகவே உள்ளனர். மக்கள் உடனடி நிவாரணத்தை எதிர்பார்க்கும் போதும், பணியின் முடிவாக வேகமான பதிலை அவர்கள் எதிர்பார்க்கும் போதும் அவர்களைச் சமாளிப்பது ஒரு பெரிய சவாலாகும்.

இக்காலப்பகுதியில் விசாரணைகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் OMP எதிர்கொண்ட பிரதான சவால்களுள் ஒன்றே விசாரணைகள் நடைபெறுகின்ற இடங்களுக்கு முன்பாக இனந்தெரியாத ஆட்களும் குழுக்களும் அடுத்தடுத்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களாகும். முறைப்பாட்டாளர்களை விசாரணைகளில் கலந்துகொள்ளவிடாது அக்குழுக்கள் மிகக்கடுமையாக அவர்களைத் தடுத்துள்ளனர். நட்டஈடு, இழப்பீடுகள் தொடர்பில் சர்வதேச நீதி வேண்டிக் கோரிக்கை விடுகின்ற தவறான கருதுகோளே அத்தகைய நியாயபூர்வமற்ற ஆர்ப்பாட்டங்களுக்கான காரணங்களாகும். அவ்வார்ப்பாட்டங்களுக்கு மத்தியிலும் சிற்சில சந்தர்ப்பங்களில் அமைதியான முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் விசாரணைச் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன

மேலும், சில முறைப்பாட்டாளர்கள் போதிய ஆவணங்களை வழங்கி விசாரணையின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக அம்முறைப்பாடுகளை வலுப்படுத்துவதற்கான போதிய ஆதார ஆவணங்கள் இல்லாமலுள்ளன.

### 8.5 இதுவரையிலான முன்னேற்றங்கள்

இவ்வகையீட்டின் கீழ் முதலாம் கட்ட முறைப்பாடுகள் 6,025 முறைப்பாடுகளைக் கொண்டிருந்தன. 31.12.2023 வரையில் OMP ஒட்டுமொத்தமாக 5,791 முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அவற்றுள் 2,832 முறைப்பாடுகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்விசாரணைகளின் பின்னர் 481 முறைப்பாட்டுக் கோப்புகள் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்துக்குப் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 377 காணப்படாமைக்கான சான்றிதழ்கள் வழங்குவதற்கும் 104 மரணப் பதிவுகள் வழங்குவதற்கும் பரிந்துரை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இழப்பீடுகளுக்கான அலுவலகத்துப் பரிந்துரை செய்யப்பட்டு 1,883 கோப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் முதலாம் கட்டத்தின் கீழ் இன்னும் 1,150 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன என்பது இதன் மூலம் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றையும் அடுத்த வருடத்துக்குள் நிறைவுசெய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 9 தரவுகளை முகாமை செய்யும் பிரிவு

ஒருங்கமைந்த தரவுத்தளமொன்றை வினைத்திறனான முறையிலும் விளைதிறனான முறையிலும் பேணுவதில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தரவு முகாமைப் பிரிவு முக்கிய பங்கு வகிக்கின்றது. காணாமல் போனவர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெறுவதற்கும், தரவைப் பகுப்பதற்கும் தரவுத்தளத்தை நிறுவுவதற்கும் OMP அதிகாரம் கொண்டுள்ளது. அதன்படி, OMP ஆனது அதன் தரவுத்தளத்தில் பல தரப்பட்ட முறைகளிலிருந்தும் பெறப்பட்ட தகவல்களைச் செயன்முறைப்படுத்தி உறுதிசெய்து, அவற்றைப் பதிவிடுதலைத் தொடர்ந்தது. அதே நேரத்தில் OMP காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட ஆட்களின் குடும்பங்களுடன் தொடர்பு கொண்டதுடன், அவர்களின் அன்புக்குரியவர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டமையினையும் ஏற்புறுதி செய்துள்ளது.

அனைத்து முறைப்பாடுகளையும் எண்ணிமப்படுத்தற் செயன்முறைக்கு உள்வாங்குவதற்கு ஒரு முன்மொழிவை OMP மேற்கொண்டுள்ளதுடன் OMP மற்றும் தொடர்புடைய பிற முகவர்களும் சேர்ந்து அச்செயன்முறையினையும் மேற்கொண்டுள்ளனர். இந்த முன்மொழிவு இரண்டு முக்கிய செயற்பாடுகளைக் கொண்டமைந்துள்ளது.

I. OMP இல் முறைப்பாடு மேற்கொண்ட காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான தரவு அடிப்படையிலான பொறித்தொகுதி மேம்பாடு.
II. OMP இல் முறைப்பாடு மேற்கொண்ட முறைப்பாடுகளின் நேரடிப் பதிவுகளை காப்புசெய்து பேணும் பொறித்தொகுதி

இவ்விடயத்தினைக் கருத்திற்கொண்டு, ICRC இன் தரவுத்தளத்தை செயற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்கு ஜனாதிபதியின் செயலாளரால் ஒரு தொழில்நுட்ப குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது ICRC மற்றும் OMP உடன் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், புகார்கள் மற்றும் தகவல்களின் பட்டியலை வெளியிடுவதன் மூலம் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பான தகவல்களை OMP பகிரங்கமாகப் பகிர்ந்து கொண்டுள்ளதுடன் மேலும் புதிய முறைப்பாடுகள் மற்றும் விசாரணை செயன்முறையின் முடிவுகளின் அடிப்படையில் இந்தப் பட்டியல் மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

தரவு முகாமைப் பிரிவினால் முகாமை செய்யப்படுகின்ற தரவுத்தளம் OMP பெற்றுக்கொண்ட பலதரப்பட்ட முறைப்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. அம்முறைப்பாடுகளுள் OMPஇற்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள், ஐக்கிய நாடுகள் சபையினால்

மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் காவல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் என்று பல முறைப்பாடுகள் உள்ளடங்குகின்றன. இத்தகைய பன்முகப்பட்ட தகவல் மூலங்களை ஒன்றுதிரட்டி தரவு முகாமைப் பிரிவானது காணாமல் போன ஆட்கள் பற்றிய வழக்குகளைத் தீர்ப்பதற்கான ஒருமுகப்பட்ட அணுகுமுறையினை வளப்படுத்துகின்ற சீரமைந்த தளம் ஒன்றினை உருவாக்குகின்றது. OMP சட்டத்தின் பிரிவு 10(1)(உ) இன் அடிப்படையில் தரவுத்தளத்தில் காணப்படுகின்ற தரவுகள் அனைத்தையும் ஒருமுகப்படுத்துவதற்காக முந்தைய காலப்பகுதியில் ஏனைய அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், விசாரணை ஆணைக்குழுக்கள் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் மூலம் பெறப்பட்ட காணாமல் போன ஆட்கள் மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது தரவுகளை ஒன்றிணைத்து வகைபிரிப்பது OMP இன் வெளிப்படையான கடப்பாடாகும். OMP தாபிக்கப்பட்டதிலிருந்து முப்படைகள், காவல் துறை, ஏனைய அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தன்னிச்சையின்றிக் காணமலாக்கப்பட்டவர்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் செயற்குழு போன்றவற்றின் மூலம் தகவல்களையும் OMP ஒன்றிணைத்து வகைபிரித்துள்ளது.

2023 டிசம்பர் வரையில் இனால் நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மொத்தமாக 21,374 என்பதை தரவுத்தளம் எடுத்துக்காட்டுகின்றது. தரவுத்தள முகாமைத்துவப் பொறித்தொகுதி இக்காலப்பகுதியில் மேலும் வளப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான பிரதான காரணம் தரவுத்தளத்தின் இயைபுறு தன்மையினைப் பேணுவதும் அதிலுள்ள முறைப்பாடுகளுக்கான விசாரணைச் செயன்முறையினைத் தொடங்குவதும் ஆகும். ஏனெனில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவுகளின் இழப்பினால் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட ஆட்களுக்கான நீதியை வழங்குகின்ற நிறுவனமாகக் காணமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் காணப்படுகின்றது. இத்தகைய தரவுத் தகவற்களஞ்சியத்தினூடாக தரவு முகாமைப் பிரிவானது அம்முறைப்பாடுகளை இராணுவ நடவடிக்கையின்போது காணாமல் போனமை பற்றியவையா அல்லது போலியானவையா அல்லது OMP இன் கடப்பாட்டுக்குள் உள்ளடக்க முடியாதவையா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 6,386 முறைப்பாடுகளை வகை பிரித்துள்ளது. எனினும் ஆரம்பிக்கப்பட்டது முதல் 31.12.2023 வரையில், மேற்கண்ட 6,386 முறைப்பாடுகள் தரவுத்தளத்தில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான 14,988 ஒழுங்கான பதிவுகளை OMP பெற்றுள்ளது.

## 10 பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு

பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவானது (VFSU) தமது அன்புக்குரியவர்களுக்கான நீதியைத் தேடும் முறைப்பாட்டாளர்களுடன் முக்கிய தொடர்பை மேற்கொள்ளும் OMP இன் உள்ளக அங்கமாகும். இப்பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவுப் பிரிவானது முறைப்பாட்டாளர்கள் வாக்குமூலம் வழங்குகையில் அவர்களது பாதுகாப்பையும் சௌகரியத்தையும் உறுதிப்படுத்துவதற்கான பல்வேறுபட்ட உளரீதியான முறைமைகளைப் பின்பற்றுகின்றது.

பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு அலுவலர்கள் (VFSO) முறைப்பாட்டுச் செயன்முறையின் தொடக்க செயன்முறையை கையாள்கின்ற அதேவேளை காணாமல் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான மிகச்சிறந்த பொறிமுறைகளையும் வழங்குகின்றது. முறைப்பாடுகளை உறுதிப்படுத்திய பிற்பாடு முறைப்பாட்டாளர்களுக்கு ஏகுளு பிரிவு அம்முறைப்பாடுகளுக்கான ஏற்புறுதிகளையும் வழங்குகின்றது.

நிரந்த ஊழியர்களுக்கான பற்றாக்குறையை கொண்டிருக்கின்றமை பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு எதிர்கொள்ளும் மிகமுக்கியமான சவால்களுள் ஒன்றாகும். குறைவான பணியாளர்களைக் கெகாண்டு செயற்படுவதன் காரணமாக புதிய முறைப்பாடுகளைக் கையாள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதுடன் செயன்முறையை உறுதி செய்வதற்காக முறைப்பாடுகளை சரிபார்க்கின்ற பணியையும் சேர்த்து VFS அலுவலர்கள் பணியாற்ற வேண்டியிருந்தது. புதிய முறைப்பாடுகளை குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களின் அடிப்படையில் வகைப்படுத்தக் கூடியவாறு 31.12.2023 இற்குள் பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

### 10.2 VFS உம் வெளியக கூட்டிணைவுகளும்

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்ப ஆதரவில் அதன் பங்கிற்கு கூடுதலாக, OMP பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து காணாமல் போனோர் பற்றிய வழக்குகள் தொடர்பான மேலதிக தகவல்களைச் சேகரிக்கிறது. ஒவ்வொரு வழக்கின் விரிவான புரிதலுக்கும் பங்களிக்கும் வகையிலான உள்ளார்ந்த பார்வை மற்றும் தரவுகளைப் பெறுவதற்கு OMP ஆனது பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் உள்ளூர் காவல் துறையினருடன் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் குடும்பங்களை உள்வாங்குவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, OMP அவர்களுடன் நெருக்கமான தொடர்பைப் பேணுகிறது. ஆதரவான மற்றும் அனுதாபமான சூழலை ஏற்படுத்துவதன் மூலம், குடும்பங்களின் குரல்கள் கேட்கப்படுவதையும், அவர்களின் தேவைகள் புரிந்து கொள்ளப்படுவதையும் OMP உறுதி செய்கிறது. OMP இன் இந்தக் கூட்டு அணுகுமுறை குடும்பங்களிலிருந்து முக்கியமான தகவல்களைச் சேகரிக்க உதவுகிறது. அது விசாரணை செயன்முறையை மேலும் வலுப்படுத்துவதுடன் தரவுகளின் ஒட்டுமொத்த தரத்தையும் மேம்படுத்துகிறது.

திறன்மிகு தரவு முகாமைத்துவத்தை எளிதாக்க, OMP இன் பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப ஆதரவு வழங்கும் பிரிவு சட்டப் பிரிவுடன் இணைந்து செயல்படுகிறது. விசாரணைச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள குழு உறுப்பினர்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குவதில் சட்டப் பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு விரிவான நடத்தை விதிகள், நடைமுறை வழிகாட்டிகள், சரிபார்ப்புப் பட்டியல்கள் மற்றும் விசாரணை முகாமைத்துவ நுட்பங்களை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும். விசாரணைச் செயன்முறைகள் சட்ட நியமங்களுக்கும் நெறிமுறைகளுக்கும் உட்பட்டு நடைபெறுகின்ற அதேவேளை அவ்விசாரணைகள் வெளிப்படையானவையாகவும், ஒழுங்குமுறையானவையாகவும், பொறுப்புக்கூறும் தன்மை வாய்ந்தவையாகவும் இருப்பதை இத்தகை வளங்கள் உறுதி செய்கின்றன.

பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு, சட்டப் பிரிவு மற்றும் தொடர்புடைய அதிகாரிகளுடனான கூட்டமைவு முயற்சிகள் ஆகியவற்றின் மூலம், ஒரு வலுவான மற்றும் நம்பகமான தரவு முகாமைப் பொறித்தொகுதியை உருவாக்க OMP விளைகின்றது. துல்லியமான ஆவணப்படுத்தல், திறன்மிகு பகுப்பாய்வு மற்றும் தகவலறிந்து முடிவெடுத்தல் ஆகிய விடயங்களுக்குஇந்த பொறித்தொகுதி துணைபுரிவதுடன், எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையில் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உண்மையைக் கண்டறிதல், நீதி மற்றும் நல்லிணக்கம் போன்றவற்றை வழங்குவதற்கான OMP இன் தூர இலக்கினை முன்னெடுத்துச் செல்வதற்கும் இது துணைபுரிகின்றது.

2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு முறைப்பாடு முடிவடையும் வரை காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை சமர்ப்பித்த முறைப்பாட்டாளர்களுக்கு 14,988 ஏற்புறுதிக் கடிதங்களை VFS அனுப்பி வைத்துள்ளது.

மேலும் அக்காலப்பகுதிக்குள்ளேயே பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து முறைப்பாடுகளுக்குமான விசாரணைகளையும் VFS நிறைவுசெய்துள்ளது.




விசாரணைச் செயற்பாடுகள் நிறைவடைந்ததன் பிற்பாடு ஒவ்வொரு விசாரணைக் குழுவின் பரிந்துரைகளும் OMP இன் உறுப்பினரால் மதிப்பாய்வு செய்யப்பட்டு தொகுக்கப்படுகின்றன. விசாரணைக் குழுவின் முக்கிய கண்டறிகைகளையும் பரிந்துரைகளையும் தொகுக்க VFS பிரிவு உதவுகிறது. VFS பிரிவினால் தயாரிக்கப்பட்ட தொகுப்பு அறிக்கை, முடிவுகளை எட்டுவதற்கான ஒரு கருவியாகவும், விசாரணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கான துணை ஆவணமாகவும் பயன்படுத்தப்படுகிறது. அதற்கு மேலதிகமாக, VFS பிரிவு 31.12.2023 அன்றைய நிலவரப்படி 4,223 முறைப்பாடுகளைத் தொகுத்து, விசாரணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்காக நிர்வாக சபையின் ஒப்புதலையும் பெற்றுள்ளது.

VFS பிரிவு, காணாமல் போனவர்களின் முறைப்பாடுகள் தொடர்பான துணைத் தகவல்களைப் பெற பல்வேறு நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை முனைப்புடன் உருவாக்குகிறது. பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களுடன் முன்கூட்டியே தொடர்பு கொண்டு, ஒவ்வொரு முறைப்பாட்டையும் பற்றிய விரிவான புரிதலை வளப்படுத்தும் வகையிலான அகப்பார்வையையும் தரவுகளையும் சேகரிக்க கூட்டுறவு உறவுகளை OMP வளர்க்கின்றது.

மேலும், விசாரணைக் குழுக்களின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு குடும்ப மறுமலர்ச்சிக் கட்டணத்தை வழங்குவதற்கான இழப்பீடுகளுக்கான அலுவலகம், காணப்படாமைக்கான சான்றிதழ்கள் (COA), இறப்புச் சான்றிதழ் (COD) ஆகியவற்றை வழங்குவதற்குப் பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரிகளுக்குச் அப்பரிந்துரைகளை VFS பிரிவு சமர்ப்பிப்பதுடன், குடும்பங்களுக்கான ஆதரவினை வழங்குவதற்காக மாவட்டச் செயலகங்களுக்கும் பரிந்துரைகள் அனுப்பப்படுகின்றன. 31.12.2023 வரையிலான VFS பிரிவின் முன்னேற்றத்தை பின்வரும் அட்டவணை விவரிக்கிறது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவு (VFS) குடும்பங்களுக்கு அனுசரணை வழங்கி பரிவு காட்டுகின்ற கட்டமைப்பு ஒன்றை

உருவாக்கியுள்ளதன் காரணமாக முறைப்பாட்டாளர்களுக்குத் தரமான சேவையை வழங்குவதற்கான உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. மேலும், குடும்பங்களின் குரல்கள் செவிமடுக்கப்படுவது மட்டுமல்லாமல், அவர்களின் தேவைகளையும் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படுவதற்கும் VFS பிரிவு உத்தரவாதமளிக்கிறது.

## 11 நிதி மற்றும் பெறுகைப் பிரிவு

2023 ஆம் ஆண்டில், ரூ.25.15 மில்லியன் தொகை கொண்ட பெறுகைத் திட்டத்துக்கு ஏற்ப, நிலையான சொத்துக்களைப் பெறுவதற்காக OMP 9.06 மில்லியன் ரூபாய் செலவு செய்துள்ளது. நிறுவனத்தில் குறைந்தபட்ச பணியாளர்களே இருந்தபோதிலும், அதன் மீண்டெழும் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு I).

நிதிசார் முன்னேற்றம் பற்றிய சுருக்கமான பார்வை

2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடாக ரூ.115 மில்லியன் தொகையை OMP பெற்றுக்கொண்டது.

| விவரம் | ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) | பெற்றுக்கொண்ட கட்டுநிதி (ரூ. மில்லியன்) | செலவினம் (ரூ. மில்லியன்) | செலவினம் பெற்றுக்கொண்ட கட்டுநிதி சதவீதம் % | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | | | | | |
| சம்பளங்களும் தனிப்பட்ட கொடுப்பனவுகளும் | 33 | 31.02 | 31.02 | 100% | |
| | 32.85 | 24.68 | 24.68 | 100% | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏனைய மீண்டெழும் செலவினங்கள் | | | | | |
| செயற்பாடுகளுக்கான செலவுகள் கொடுப்பனவுகள் | 24 | 22.063 | 22.063 | 100% | |
| **மொத்தத் தொகை** | **89.85** | **77.763** | **77.763** | 100% | |
| | | **மூலதனம்** | | | |
| மூலதனம் | 25.15 | 9.057 | 9.057 | 37% | மட்டுப்படுத்தப் பட்ட காலப்பகுதியின் காரணமாக குறைநத் பட்சப் பாவனையே மேற்கொள்ளப் பட்டது. தரவுத்தள முறைமையின்மை |
| **மொத்தம்** | **115** | **86.82** | **86.82** | **84.86** | |

## 12. மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவு

தலைமை அலுவலகத்தைக் கொழும்பிலும் கிளிநொச்சி, மன்னார், மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பிராந்திய அலுவலகங்களையும் முழுமையாக செயற்படுத்த OMP தனது குறிப்பிடத்தக்க ஆற்றல் மற்றும் வளங்களை ஈடுபடுத்தியுள்ளது. பிராந்திய அலுவலகங்களை நிறுவியமையானது பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குடும்பங்களை இலகுவாகச் சென்றடைய OMP இனை ஏதுவாக்கியுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எவ்வேளையிலும் உணர்திறன், கண்ணியம் மற்றும் கௌரவத்துடன் கவனிக்கப்படுகின்றார்கள் என்பதை உறுப்படுத்தி செயற்படுவதில் OMP உறுதி பூண்டுள்ளது.

மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவு முக்கியமாக OMP இன் பொதுவான செயல்பாட்டைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வது தொடர்பான முக்கிய செயல்பாடுகளைக் கவனித்து வருகிறது. இதில் தளவாடங்கள், நிகழ்ச்சிகளை முகாமை செய்தல், மற்றும் பிற அனைத்து நிர்வாக செயற்பாடுகளும் அடங்கும். மேலதிகமாக, மனித வள மற்றும் நிர்வாகப் பிரிவு நிருவாகசபை உறுப்பினர்கள், பிராந்திய அலுவலகங்கள், அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் அடிக்கடி ஈடுபாட்டைக் கொண்டிருப்பதால், OMP ஆனது ஆட்சேர்ப்புத் திட்டம், பணியாளர் வெற்றிடப் பட்டியல், இரண்டாம் நிலை அடிப்படையில் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் போன்றவற்றை மறுபரிசீலனை செய்ய முடிந்துள்ளதுடன் ஊழியர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை (EB) மற்றும் அரசகரும மொழிகள் பரீட்சை போறன்றவற்றிலும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்க முடிந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில், OMP உடன் இணைக்கப்பட்ட 12 அதிகாரிகள் EB பரீட்சையினை வெற்றிகரமாக முடித்துள்ளதுடன் OMP இன் 23 அதிகாரிகள் இரண்டாம் மொழிப் பாடத்தில் வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மேலும், OMPக்கான திறன் விருத்தி முயற்சிகளுக்காக தேசிய சமாதானப் பேரவையுடன் (NPC) ஒரு கூட்டாண்மை நிறுவப்பட்டது. OMP குழுவினரின் திறன்களை விருத்தி செய்வதற்காகக் கொழும்பில் தேசிய சமாதான பேரவையால் (NPC) மூன்று நாள் வதிவிட செயலமர்வும் நடத்தப்பட்டது. அதேபோன்று, NPC மற்றும் OMP குழுவினர், மாவட்ட அளவில் அரசாங்க அதிகாரிகளுக்கும் இத்தகைய பயிற்சி நிகழ்வினை நடத்தியுள்ளனர். இந்த திட்டத்திற்கு கனடியத் தூதரகத்தால் நிதியளிக்கப்பட்டது.

தீர்மானம் மேற்கொள்வதில் தவிசாளர் மற்றும் OMP நிருவாக சபை உறுப்பினர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர், அத்தியாவசிய பணிகளை பல மட்டங்களிலும் மேற்கொள்வதற்கு ஒட்டுமொத்த நிர்வாக செயற்பாடுகளையும் ஈடுபடுத்துவதில் அவர்களின் தீர்மானங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. மூலோபாய இலக்குத் திட்டம், பணியாளர்களை மறுசீரமைத்தல், விசாரணைச் செயன்முறை மற்றும் திறன் விருத்தி ஆகியவை OMP நிருவாக சபை உறுப்பினர்கள் தங்கள் அமர்வுகளின் போது கலந்தாலோசித்த பல விடயங்களில் ஒருசில மட்டுமே.

மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பிரிவுக்குத் தலைவர் இல்லாத போதிலும், நிர்வாகச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு, OMPயின் செயல்பாடுகளைக் கலந்தாலோசிக்கவும், ஊழியர்களுடன் ஒத்துழைக்கவும் நிருவாக சபை உறுப்பினர்கள் முயற்சி செய்துள்ளனர். மேலும், ஆட்சேர்ப்பு, நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவம், தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பிற அத்தியாவசிய நிர்வாக நடவடிக்கைகள் போன்ற நிர்வாக செயல்பாடுகளையும் நிருவாக சபை உறுப்பினர்கள் கையாண்டுள்ளனர்.

### 12.1 பணியாளர் ஆட்சேர்ப்பு

வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான மட்டுப்படுத்தல்கள், பல்வேறு சட்டதிட்டங்கள் காரணமாக முக்கியமான பதவிகளுக்கு

ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதிலும் ஆட்சேர்ப்பதிலும் OMP குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டது. மேலும், கணிசமான எண்ணிக்கையிலான ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டதை OMP அவதானித்துள்ளது. இருப்பினும், அத்தியாவசியத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்புகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

OMP உருவாக்கப்பட்டது தொடக்கம் அதன் பதவிகளை நிறைவேற்றத் தேவைப்படும் அனுபவத்துடன் கூடிய தகைமை மிக்க ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்ய குறிப்பிடத்தக்க காலம், பலம் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பணி நிலையில் 255 ஆட்களுக்கான பணியாட்டொகுதி காணப்படுகின்ற போதிலும் நிரந்தர பணி நிலையில் 41 அங்கத்தவர்களும் ஒப்பந்த அடிப்படையில் ஒரு அலுவலரும் காணப்படுகின்றமை 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட முக்கிய விடயம் ஆகும். அதற்கேற்ப 2023 ஆம் ஆண்டில் பின்வரும் 23 அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.

| **தொடரிலக்கம்** | **பதவி** | **பணியாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | மனிதவள முகாமை மற்றும் நிருவாகப் பிரிவுத் தலைவர் | 01 |
| 2. | பாதுகாப்புப் பிரிவுத் தலைவர் | 01 |
| 3. | உள்ளகக் கணக்காய்வாளர் | 01 |
| 4. | சிரேஸ்ட உளவியல் அலுவலர் | 01 |
| 5. | சிரேஸ்ட பாதுகாப்பு அலுவலர் | 02 |
| 6. | சிரேஸ்ட தரவுப் பகுப்பாய்வாளர் | 01 |
| 7. | ஆய்வு அலுவலர் | 01 |
| 8. | பாதிப்புற்றோர் மற்றும் குடும்பநல ஆதரவு அலுவலர் | 04 |
| 9. | சட்ட அலுவலர் | 04 |
| 10. | புலனாய்வு அலுவலர் | 04 |
| 11. | சிரேஸ்ட புலனாய்வு அலுவலர் | 02 |
| 12. | தவிசாளர் / பிரதம பணிப்பாளருக்கான பிரத்தியேக உதவியாளர் | 01 |
| **மொத்தம்** | | **23** |

2023 ஆம் ஆண்டு நிறைவுக்குள் புதிய அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டமை காரணமாக நிறுவனத்தின் ஒட்டுமொத்த பணியாட்டொகுதியின் எண்ணிக்கை 41 ஆக அதிகரித்தது.

| **தொடரிலக்கம்** | **பதவி** | **பணியாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | பிரதம பணிப்பாளர் | 01 |
| 2. | மனிதவள முகாமை மற்றும் நிருவாகப் பிரிவுத் தலைவர் | 01 |
| 3. | தரவு முகாமைத்துவப் பிரவுத் தலைவர் | 01 |
| 4. | கண்டறிதற் பிரிவின் தலைவர் | 01 |
| 5. | சிரேஸ்ட உளவியல் அலுவலர் | 01 |
| 6. | சிரேஸ்ட தரவுப் பகுப்பாய்வாளர் | 01 |
| 7. | சிரேஸ்ட புலனாய்வு அலுவலர் | 02 |
| 8. | சிரேஸ்ட பாதுகாப்பு அலுவலர் | 02 |
| 9. | உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| 10. | (பிரதான) பிராந்திய ஒருங்கிணைப்பாளர் | 03 |
| 11. | ஆய்வு அலுவலர் | 01 |
| 12. | சட்ட அலுவலர் | 04 |
| 13. | பாதிப்புற்றோர் மற்றும் குடும்ப ஆதரவு அலுவலர் | 09 |
| 14. | புலனாய்வு அலுவலர் | 04 |

| | | |
|---|---|---|
| 15. | பிரத்தியேக உதவியாளர் | 01 |
| 16. | முகாமைத்துவ உதவியாளர் | 08 |
| | மொத்தம் | 41 |

2023 ஆம் ஆண்டில் சேவையாற்றிய நிருவாகக் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு,

| # | முழுப் பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. மகேஷ் கட்டுலந்த (சட்டத்தரணி) | தவிசாளர் |
| 2 | திரு. டபிள்யு.பண்டார கணேகல | நிருவாகக் குழு உறுப்பினர் |
| 3 | திருமதி. எஸ்.டி.அர்பா தாசிம் | நிருவாகக் குழு உறுப்பினர் |
| 4 | திரு. தம்பியையா யோகராஜா | நிருவாகக் குழு உறுப்பினர் |
| 5 | திரு. பி.எம்.டபிள்யு.சம்பத் பெரேரா | நிருவாகக் குழு உறுப்பினர் |
| 6 | திரு. மாதவா ஜயவர்த்தன | நிருவாகக் குழு உறுப்பினர் |
| 7 | திரு. ஜயந்த விக்கிரமசிங்க | நிருவாகக் குழு உறுப்பினர் |

## 13. கண்டறிகை மற்றும் புலனாய்வுப் பிரிவு

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஒரு கண்டறிகை மற்றும் விசாரணைப் பிரிவை நிறுவுவதற்கான முறையான உத்தரவைக் கொண்டுள்ளது. அதன்படி, தாபிக்கப்பட்ட கண்டறிகை மற்றும் புலனாய்வுப் பிரிவானது காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அடிப்படைப் பிரிவாக உள்ளதுடன் வழங்கப்பட்டுள்ள விசாரணை அதிகாரங்களுக்கு அமைவாக செயற்படுகின்றது. காணாமற்போன ஆட்கள் பற்றிய பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் மேலதிக விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்ட கோப்புகள் மீதான இரண்டாம் நிலை நடவடிக்கையை கண்டறிகை மற்றும் புலனாய்வுப் பிரிவு மேற்கொள்கின்றது.

இப்பிரிவு பல முக்கியமான விடயப் பரப்புகளைக் கொண்டு செயற்படுகின்றது. முதலில், காணாமல் போனவர் மற்றும் விண்ணப்பதாரரின் அடையாளம் விசாரிக்கப்படுகிறது. அதற்காக, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம், மோட்டார் வாகனங்கள் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் மாவட்ட/பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கோரப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டத்தில், மேலும் காணாமல் போன தனியாட்கள் பற்றிய உண்மைகள், சம்பவம், காலம், காரணிகள் தொடர்பான ஏனைய உண்மைகள் ஆராயப்பட்டு, அதற்காக இலங்கை பொலிஸ் திணைக்களம் மற்றும் அதன் நிரல் முகவர்கள் மற்றும் முப்படையினர் உட்பட பாதுகாப்பு சேவைகள், புலனாய்வு சேவைகள் உள்ளிட்டவற்றின் தகவல்களும் பெறப்படும். இது தவிர, விண்ணப்பதாரர் அல்லது சாட்சிக்காரர் வழங்கிய தகவல்களின்படி, உரிய விசாரணைகளுக்காக சிறைச்சாலைத் திணைக்களத்தின் உதவியும் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் பிற அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படுகிறன. 31.12.2023 வரையிலான நிலவரப்படி, 931 முறைப்பாடுகள் மேலதிக விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், 338 முறைப்பாடுகளுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த 338 முறைப்பாடுகளில், மேற்கூறிய நிலைகளின் கீழ் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்ட போதிலும், காணாமல் போனவர்கள் 50 பேர் தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கண்டறிகை மற்றும் புலனாய்வுப் பிரிவினர் பொலிஸ் திணைக்களத்தின் உதவியுடன் இதுவரையில் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில் காணாமல் போனதாகக் கூறப்படும் 12 பேரின் கதி என்ன என்பது தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும்




04 கோப்புகள் நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்குகள் காரணமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விவரங்கள் வருமாறு

| விவரணம் | இலங்கையில் வாழ்பவர் | சட்டபூர்வமாக வெளிநாட்டில் உள்ளவர் | சட்டவிரோதமாக வெளிநாட்டில் உள்ளவர் | காணாமல் போனவராக கருதப்படமாட்டார் | நீதிமன்ற வழக்கு |
|---|---|---|---|---|---|
| வழக்குகளின் எண்ணிக்கை | 06 | 04 | 01 | 01 | 04 |

இது தவிர, நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் அமைச்சின் அறிவுறுத்தல்களின்படி, கண்டறிதல் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை மேலும் செயற்றிறனாக்குவதற்கான வழிகாட்டிக் கோவையும் வரையப்பட்டுள்ளது. 13.12.2023 அன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் நடைபெற்ற கலந்துரையாடல் அமர்வுக்குப் பிறகு, அந்த வழிகாட்டுதல்கள் புதுப்பிக்கப்பட்டு ஒரு தொகுப்பாக வடிவமைக்கப்பட்டு நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டன.

## 14. பாதுகாப்புப் பிரிவு

பாதுகாப்பு பிரிவு என்பது OMP இன் முக்கிய கூறுகளில் ஒன்றாகும், மேலும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பிற்கான ஒரு அமைப்பை உருவாக்கி செயல்படுத்துதல், தனிநபர்களைப் பாதுகாத்து OMP செயற்பாட்டில் அவர்களை முனைப்புடன் பங்குபற்றச் செய்தல் ஆகியவை இதில் அடங்கும்.

பாதுகாப்புப் பிரிவானது தனிநபர்களின் பௌதிக ரீதியான ஒருமைப்பாடு, பிரச்சினைகளிலிருந்து பரந்த பாதுகாப்பு, அவர்களது உளவியல் சமூக நல்வாழ்வைப் பாதுகாப்பது போன்றவற்றில் அக்கறை கொண்டுள்ளது.

இப்பிரிவானது வினைத்திறன்மிக்கதாக இருக்கும் வகையில், அது ஆவணப்படுத்தல், முன்னாயத்த ரீதியான திட்டமிடல் மற்றும் பாதுகாப்புகளை நிறுவுதல், வடிவமைத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். மேலும், நியமமான நடவடிக்கைச் செயன்முறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள், இடர் மதிப்பீடு, சம்பவங்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தொடர்ச்சியான அனுசரணை வழங்குதல் (ஆட்களின்

பாதுகாப்புக்குத் துணைபுரிதல்) மற்றும் அதற்காகக் குரல்கொடுத்தல் ஆகியவற்றை வலியுறுத்துகின்றது.

பாதுகாப்பு பிரிவு எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்று நிரந்தர பணியாளர்கள் இல்லாமையாகும். எனவே, இது ஒரேயொரு முகாமைத்துவ சேவை அலுவலரைக் கொண்டு சட்டப் பிரிவின் கீழ் இயங்கியது. இத்தகைய பணியாளர்கள் பற்றாக்குறை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் சிக்கல்கள் ஏற்பட வழிவகுத்தது, மேலும் புதிய முறைப்பாடுகளைப் பெறுதல், கடப்பாட்டுக்குள் உள்ளடங்காத விசாரணைகளை நடத்துதல், கண்காணிப்பு அட்டவணையைத் தவறாமல் புதுப்பித்தல் மற்றும் அரசாங்க அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்குபற்றுதல் ஆகியவற்றுடன் சேர்த்தே இப்பிரிவு பணியாற்ற வேண்டியிருந்தது.

2020 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை தொடர்ந்து கொண்டு வரப்பட்ட கண்காணிப்பு அட்டவணையை பாதுகாப்பு அலகு புதுப்பித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில், கண்காணிப்பு அட்டவணையில் ஏற்கனவே புதுப்பிக்கப்பட்ட 63 முறைப்பாடுகள், காணாமல் போனவர்களது எண்ணிக்கை, காணாமல் ஆக்கப்பட்டவர்களது எண்ணிக்கை மற்றும் காணாமல் போனோர் அல்லது இறப்பு சம்பவங்கள் தொடர்பாக போராட்டம் நடத்தியமை எனப் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரிவு புதிய முறைப்பாடுகளைப் பெற்றுள்ளதுடன் கடப்பாட்டுக்குள் உள்ளடங்காத 15 விசாரணைகளை 2023 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடத்தியுள்ளது. 30.08.2023 அன்று VFS பிரிவுடன் இணைந்து "காணாமல் ஆக்கப்பட்டோர் தினம்" அனுஷ்டிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதிலும் பாதுகாப்புப் பிரிவு ஈடுபட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் 5,791 குடும்பங்களுடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், விசாரணைக் குழு உறுப்பினர்கள், விசாரணை நடக்கும் வளாகங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் போன்றவற்றின் பாதுகாப்பில் பாதுகாப்புப் பிரிவு கவனம் செலுத்துவதுடன் OMP இன் ஒட்டுமொத்த நடவடிக்கைச் செயன்முறை தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளில் இலங்கைக் காவல் துறை இராணுவ அதிகாரிகளுடன் இணைந்து பாதுகாப்பு பிரிவு குறிப்பாகப் பணியாற்றுகின்றது.

மேலும், பாதுகாப்புப் பிரிவானது, CSO/அரச துறைகள் மற்றும் இலங்கைப் பொலிஸாருடனான சந்திப்பை மேற்கொண்டு பாதுகாப்புப் பிரிவில் பதிவுசெய்யப்பட்டுள்ள ∴ பாதுகாப்புப் பிரிவால் பகிரப்பட்டுள்ள ஆவணங்கள், ஏனைய தொடர்புடைய தகவல்கள் போன்றவை தொடர்பில் மேலதிகத் தகவல் மற்றும் சரிபார்ப்புச் செயன்முறைகளைத் தேடுவதில் பாதுகாப்புப் பிரிவு ஈடுபட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, காணாமல் போனவர்களின் குடும்பங்கள், OMP இன் ஊழியர்கள், தொடர்புடைய அதிகாரிகள், தரவுகள் அல்லது OMP போன்ற பிற நிறுவனங்கள் போன்றவற்றுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற OMP இன் பணியில் பாதுகாப்புப் பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. 2023 ஆம் ஆண்டில், ஆறு ஊடக சந்திப்புகளையும், மூன்று ஊடக வெளியீடுகளையும் நான்கு நேர்காணல்களையும் OMP நடத்தியது, இதில் OMP இன் முன்னேற்றம் பொது மக்களுக்குப் புதுப்பிக்கப்பட்டதுடன் பூர்வாங்க விசாரணை செயன்முறை தொடர்பான தவறான கருத்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

## 15. மூலோபாயத் திட்டம், தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல் பிரிவு

காணாமல் போதல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் பின்னணியில் உள்ள காரணங்கள், அவர்களின் சம்பவம் மற்றும் தாக்கம் பற்றி பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரித்து அவர்களது குடும்பங்களுக்கு உதவுவதற்கு ஆதரவு அணிதிரட்டல் OMP இன் கடப்பாடாகும். 2018ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம், இலக்கு மற்றும் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கும், காணாமலாக்கப்படுவதன் விளைவுகள் பற்றி விழிப்புணர்வூட்டுவதற்கும், சமூகம் மற்றும் அரசாங்கத்திற்கான தேவையை முன்னிலைப்படுத்தவும், காணாமல் போன

அல்லது காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், OMP பற்றிய கட்டுக்கதைகளை அகற்றவும் OMP ஆனது தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல் மூலோபாயத்தை மேம்படுத்தியுள்ளது. இதனை மேற்கொள்ளும் பொருட்டு, காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர், முக்கிய பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் OMP இன் செயற்பாடுகளை பௌதீக மற்றும் டிஜிட்டல் தளங்கள் ஊடாக அறிந்துகொள்வதனையும் OMP உறுதிப்படுத்தியுள்ளது.

தொடர்பாடல் மற்றும் தொடர்புகொள்ளல் பிரிவு இதுவரை நிறுவப்பட்டிருக்காமையால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு அமைய பொருத்தமான பிரிவுகளினூடாக சகல செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வைசெய்யப்பட்டன.

**15.1 இலங்கையின் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தேவைகள் பற்றிய மதிப்பீட்டறிக்கை**

IOM, வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஆதரவுடன் OMP ஆனது 2023 ஆம் ஆண்டில் தேவைகளை மதிப்பீடு செய்தது. இலங்கையில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் கதிகளையும் இருப்பிடங்களையும் கண்டறிவதற்கான கருமங்களை ஆற்றுவதற்கு முஆீ கொண்டுள்ள நிறுவனரீதியான ஆற்றல் மற்றும் தொழிநுட்ப ரீதியான கருவிகள் போன்றவற்றின் தேவை குறித் மதிப்பீட்டை அவ்வறிக்கை வழங்குகின்றது. இந்த மதிப்பீடு 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் 2023 ஜூலைக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டது மற்றும் அறிக்கை முடிவுகள் நிர்வாகக் குழுவுக்கும் ஊழியர்களுக்கும் 2023 ஒக்டோபர் மாதத்தில் வழங்கப்பட்டது. இறுதி அறிக்கை 2023 நவம்பர் மாதத்தில் OMP உடன் பகிர்ந்துகொள்ளப்பட்டது.

சூழல் சார்ந்த விவரக்குறிப்பு, பாதிக்கப்பட்டவர்களின் மையத்தன்மை, நிபுணத்துவ ஆலோசனையின் பெறுமதி, புறநிலைத்தன்மை, பரந்துபட்ட தன்மை மற்றும் இரகசியத்தன்மை உள்ளிட்ட நிலைமாறுகால நீதித் துறையில் கற்றுக்கொண்ட நல்ல நடைமுறைகளால் இந்த செயன்முறை வழிநடத்தப்பட்டது. இம்முறைமையானது பகுப்பாய்வு மற்றும் ஊடாடும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தது. பகுப்பாய்வு அணுகுமுறையில் OMP இன் சட்டப்பூர்வ கடப்பாடுகள் பற்றிய சுற்றமர்வு மதிப்பாய்வு, அதன் வருடாந்த அறிக்கைகள், நிர்வாகத் தகவல், கல்விசார் கட்டுரைகள் மற்றும் பத்திரிகைகளின் மதிப்பாய்வு ஆகியவை அடங்கும். நல்லிணக்க பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கும் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச அறிக்கைகளுக்காகவும் OMP தாபிக்கப்படும் போது உருவாக்கப்பட்ட ஆவணங்கள், அதாவது ஆலோசனை செயலணியின் அறிக்கை மற்றும் நிருவாக திட்டமிடல் ஆவணங்கள் போன்றவை இந்த மதிப்பாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்திலும் சமூகத்திலும் உள்ள முக்கிய பங்குதாரர்களின் நிலைப்பாட்டில் இருந்து, பாதிக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசாங்கம் உட்பட, OMP இன் நோக்கங்களை ஊடாடும் அணுகுமுறையானது கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களைப் பயன்படுத்தி விசாரிக்கிறது. OMP இன் கடப்பாடு, சவால்கள் பற்றிய விழிப்புணர்வு, செயற்றிறன் மிக்க வகையில் பயணிப்பதற்கு OMP சாதகமாகக் கொண்டுள்ள நம்பிக்கையும் அடையாளமும், அவற்றின் அளவு போன்ற விடயங்கள் நேர்காணலின்போது அறியப்பட்டுள்ளன.

இந்த ஆய்வை மேற்கொள்வதில் ஆலோசனைக் குழு பல்வேறு பங்குதாரர்களை நேர்காணல் செய்தது. இதில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP), நல்லிணக்க பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் (SCRM), ஆலோசனை செயலணி (CTF), இழப்பீடுகளுக்கான அலுவலகம், இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அதன் பிரதிநிதிகள் போன்றவற்றின் தற்போதைய மற்றும் முன்னாள் அதிகாரிகள் அடங்குவர். மற்றும்

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள்/உறவினர்கள் மற்றும் சிவில் சமூகம் போன்றவர்களுடனும் ஆலோசனைக் குழு நேர்காணல் மேற்கொண்டுள்ளது.

### 15.2 முந்தைய ஆணைக்குழுக்கள் மற்றும் வேளைக் குழுக்களின் கண்டறிதல்களையும் பரிந்துரைகளையும் புலனாய்வு செய்து விசாரணை மேற்கொள்வதற்கான விசாரணை ஆணைக்குழு[13] முன்னிலையில் முஆீ இன் பிரசன்னம்

பொறுப்புக்கூறல் தொடர்பாக, சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் அதுபோன்ற பிற கடுமையான குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட முந்தைய ஆணைக்குழுக்கள் மற்றும் வேளைக் குழுக்களின் கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகளை புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும், நீதிபதி நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை ஆகிய இரண்டும் அதிமேதகு ஜனாதிபதியிடம் 21.07.2021 அன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், OMP அதன் முன்னேற்ற அறிக்கையை அக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது மற்றும் OMP எடுத்த அனைத்து முயற்சிகளையும் குறிப்பாக மூலோபாய கட்டமைப்பை[14] மேம்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்ட அதே வேளையில், அவ்வறிக்கைகளில் உள்ள கண்டறிகைகள் மற்றும் பரிந்துரைகளுடன் OMP இன் முக்கிய சாதனைகளும் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

அந்த இரண்டு முக்கிய ஆவணங்களிலும் உள்ள கண்டறிகைளையும் பரிந்துரைகளையும் 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் OMP கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும், மேலும் நன்கொடை முகவர்களின் ஆதரவுடன் அவ்விடயங்கள் செயலில் திட்டங்களில் அமுல்படுத்தப்படும். மேலும் அப்பரிந்துரைகள் OMP இன் மூலோபாயக் கட்டமைப்பிற்கும் வழிகாட்டும்[15].

### 15.3 ஊடகங்களுடனான தொடர்பு

பாதிக்கப்பட்டோர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தின நினைவாக ஆகஸ்ட் 30 ஆம் திகதி ஊடக மாநாடொன்று நடாத்தப்பட்டது.

### 15.4 எண்ணிம ரீதியான பிரசன்னம்

எண்ணிம வலைத்தளங்கள் ஊடாக பொது மக்களின் பங்கேற்பை இயலச் செய்ய ருவிற்றர் மற்றும் முகநூல் போன்றவற்றில் OMP சமூக ஊடகக் கணக்குகளை முகாமை செய்தது. 2023 டிசம்பர் 31 வரை OMP ருவிற்றரில் 2,088 பின் தொடர்பவர்களையும் முகநூலில் 5,000 பின் தொடர்பவர்களையும் கொண்டிருந்தது.

## 16. தகவலுக்கான உரிமை

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ், OMP இன் நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புக்கூறும் தன்மையையும் உறுதிப்படுத்துவதில் OMP உறுதிபூண்டுள்ளது. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்பெறும் கோரிக்கைகளை அச்சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக 2023 ஆம்

---

14 https://www.mol.gov.lk/images/OMP/Docs/Strategic_Road_Map.pdf

15 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மூலோபாயப் பாதைத் திட்டத்தை மாற்றியமைப்பதில் OMP நடவடிக்கை மேற்கொள்கின்றது

ஆண்டில் OMP நேர்த்தியான முறையில் பதிலளித்துள்ளது. அத்தகைய செயற்பாட்டைப் பின்வரும் அட்டவணை விவரிக்கின்றது.

| இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2023 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 27 |
| 2 | முழுமையாக தகவல் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | 18 |
| 3 | பகுதியளவு தகவல் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை / பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 4 | சட்டத்தின் பிரிவு 05 இன் படி மறுக்கப்பட்ட அல்லது தடைப்படுத்தப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை | பொருத்தமற்றது |
| 5 | சட்டத்தின் பிரிவு 05 இல் உள்ளடக்கப்பட்ட காரணங்கள் இன்றி மறுக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை (எ.கா தகவல் கிடைக்கப் பெறாமை) | 01 |
| 6 | தகவல் கோரிக்கை ஒன்றுக்கு பதிலளிக்க எடுத்த சாதாரண காலம் (வேலை நாட்களின் எண்ணிக்கை) என்ன? | பொருத்தமற்றது |
| 7 | கடிதம் ஊடாக கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைகள் எத்தனை? | 17 |
| 8 | மின்னஞ்சல் ஊடாகக் கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைகள் எத்தனை? | பொருத்தமற்றது |
| 9 | கடிதம் அல்லது மின்னஞ்சல் அல்லாத வேறு வழிகளில் கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைகள் எத்தனை? | பொருத்தமற்றது |

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கொள்கைகளை நிலைநாட்டுவதில் OMP திடசங்கற்பத்துடன் செயற்படுகின்றது. பொதுமக்கள் தகவல்களை அணுகிப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு வசதியளிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை OMP அறிந்துள்ளதுடன் அது விடயத்தில் எமது செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் வளப்படுத்திக்கொள்வதை நாம் தொடர்ச்சியாக மேற்கொள்ளவும் உள்ளோம்.

## 17. 2023 ஆம் ஆண்டில் எதிர்கொண்ட சவால்கள்

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் பிரிவு 11 (அ) ஆனது நீக்கப்பட்டு 2017 ஆம் (2017 ஆம் ஆண்டின் 09 ஆம்) இலக்க திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதன் காரணமாக கொள்கைகள் சார்ந்த உள்ளகச் சவால்கள் எழுந்தன. இச்சட்டச் சீர்திருத்தத்திற்கு ஏற்ப OMP இன் கடப்பாட்டை அடைந்துகொள்ள அவசியப்படுகின்ற ஒப்பந்தங்களை யாரேனும் ஆளுடன் அல்லது ஏதேனும் நிறுவனத்துடன் கைச்சாத்திடுவது தொடர்பில் அதிலுள்ள வாசகமானது கவனம் செலுத்தியுள்ளபடியால் சுயாதீனமான ஒரு நிறுவனமாக சேவையாற்றுவதில் OMP சிக்கல்களை எதிர்கொள்கின்றது.

மேலும், மட்டுப்படுத்தப்பட்ட மனித வளங்களால் OMP கடுமையான சவால்களை எதிர்கொள்கிறது. OMP அங்கத்தவர்களின் பதவி விலகல் மூலமான தொடர்ச்சியான தலைமைத்துவ மாற்றங்களினால் ஒரு சுயாதீன நிறுவனம் என்ற வகையில் OMP பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட பணி நிலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் பிரதான சவாலாகக் காணப்பட்டது. இவ்வருடத்தின் இறுதிக் காலாண்டில் புதிய தவிசாளரின் தலைமைத்துவத்தின் கீழ் OMP ஆனது நீதி அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுகள், அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்கள் போன்றோருடன் இச்சவாலை எதிர்கொள்வதற்கு ஏற்ற ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது.

மேலும், OMP பல சவால்களை எதிர்கொள்கிறது, இதில் ஒன்று முந்தைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் சான்றுப் பதிவுகளின் தொடர்புறு தன்மையைப் பரிசீலிக்கின்ற செயன்முறை ஆகும். இது அதிக வேலை நேரத்தைப் பயன்படுத்துகிறது. உதாரணமாக, பயிற்சி பெற்ற சமூக சேவகர் ஒரு நாளைக்கு சராசரியாக 15 கோப்புகளை மட்டுமே நிர்வகிக்க முடியும். OMP நடுத்தர முகாமைத்துவப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்து பணியமர்த்துவதில் வெற்றி பெற்றிருந்தாலும், உயர்நிலை முகாமைத்துவப் பணியாளர்கள் மற்றும் இளநிலை முகாமைத்துவப் பணியாளர்களைப் பணியமர்த்துவதில் தற்போதும் OMP சிரமங்களை எதிர்கொள்கிறது.

## 18. நன்றி நவிலல்

ஒட்டு மொத்த வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் நிறுவனத்தை வலுவூட்டுதல் ஆகியவற்றின் அடிப்படையில் OMP மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இந்த 2023 ஆம் ஆண்டில் மூலோபாயத் திட்டத்தை இறுதி செய்வது OMP இற்கு இயலுமாகியது. அதன்மூலம் கட்டம் 1 உடன் தொடர்புடைய 92% இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் விண்ணப்பதாரர்கள் மற்றும் சாட்சிகளின் சான்றுகளின்படி சாட்சியமளிக்கப்பட்டுள்ளன. மேலும் கண்டறிதல் மற்றும் புலனாய்வுப் பிரிவு, குடும்ப ஆதரவு வழங்கல் பிரிவு ஆகியன பணியாளர்களுடன் ஒன்று சேர்த்து நிறுவப்பட்டுள்ளன.

எனினும், மக்களுக்கும் OMP இற்கும் இடையிலான ஒப்பந்தக் கடமைகளை வலுப்படுத்த, மேலும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதனால் OMP பாதிக்கப்பட்ட சமூகத்தை ஆற்றித்தேற்ற முடியும்.

இறுதியாக, நிருவாகக்குழு உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் கூட்டாண்மை அமைப்புகளால் வகுக்கப்பட்ட இந்த அடித்தளம், OMP இன் கடப்பாட்டினை சிறப்பாக செயல்படுத்துவதற்கும், அதிக சாதனைகள் செய்வதற்கும் நிச்சயமாக புதிய பாதைகளை உருவாக்கிக் கொடுக்கும்.

## 19. தணிக்கையாளர் அறிக்கை

தவிசாளர்,

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 31.12.2023 ஆந் திகதியுடன் நிறைவுற்ற நிதிக் கூற்றுகள் தொடர்பிலும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பிலும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகம் வழங்கும் அறிக்கை.**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

### 1. நிதிசார் கூற்றுகள்

#### 1.1. தகுதிபெறும் அபிப்பிராயம்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 31.12.2023 ஆந் திகதியுடன் நிறைவுற்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுகளின் கணக்காய்வு 31.12.2023 ஆந் திகதி வரையிலான வருமானம் மற்றும் செலவினங்களின் கூற்றினையும், ஒப்புரவு ரீதியான மாற்றங்கள் பற்றிய கூற்றினையும், காசுப் புழக்கம் பற்றிய கூற்றினையும் உள்ளடக்கி முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் விவரத் தொகுப்பினை உள்ளடக்கிய நிதிசார் கூற்றுகள் பற்றிய குறிப்புகளையும் கொண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (1) உடன் சேர்த்து வாசிக்கக் கூடிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையில் காணப்படும் நான் கருத்திற்கொள்கின்ற எனது அவதானிப்புகளும் அபிப்பிராயங்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.2. எனது அபிப்பிராயத்தின் அடிப்படையில், இந்த அறிக்கையின் **தகுதிபெறும் அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்** என்ற பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களின் செயல்வலு தவிர, நிறுவனத்தின் 31.12.2023 ஆந் திகதி வரையில் உள்ள நிதிசார் நிலைமை பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை நிதிக் கூற்றுகள் வழங்குகின்றன. அத்துடன் நிறுவனத்தின் நிதிசார் செயற்பாடுகளும் காசுப் புழக்கங்களும் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவே நிறைவுற்றுள்ளது.

#### 1.2.1. தகுதிபெறும் அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்

(அ) 31.12.2023 வரையிலான பேரேடுகளையும் நிதிக் கூற்றுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற சந்தர்ப்பத்தில் ஆறு பேரேடுகளின் பெறுமதியாக ரூபா. 36,850,761.00 ஆகும் என்பதுடன் அத்தகைய ஆறு கணக்குகளினதும் பெறுமதியாக ரூபா. 38,141,109 நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப, ரூபா. 1,290,348 வித்தியாசம் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மீளய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இராஜகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள அலுவலகத்தின் புதிய கட்டிடத்திற்கான வருடாந்த குத்தகைப் பணம், பாதுகாப்புச் செலவுகள், நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் போன்றவற்றுக்கான செலவாக ஏற்பட்ட செலவு ரூபா. 6,615,760 தொகையானது நீதி அமைச்சுக்கு செலவாகியுள்ளது. அது வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய கணக்குகளில் உள்வாங்கப்படவில்லை.

(இ) மதிப்பீட்டு ஆண்டின் முதலாம் காலாண்டில் மட்டக்களப்புக் கிளை அலுவலகத்துக்கான குத்தகைப் பணம் ரூபா. 300,000.00 செலுத்தப்பட்டிருந்த போதிலும், குத்தகைப் பணத் தொகையானது மொத்தச் செலவினத்தில் ரூபா. 1,200,000.00 என்பதற்குப் பதிலாக ரூபா. 1,500,000 என்று காட்டப்பட்டுள்ளது. எனவே, துண்டுவிழும் தொகையானது ரூபா. 300,000.00 என்று மிகையாக விவரிக்கப்பட்டுள்ளதுடன் நிதி நிலைமை பற்றிய கூற்றில் தற்போதைய பொறுப்புடைமையின் கீழ் ரூபா. 900,000.00 என்று காட்டப்படுவதற்குப் பதிலாக அட்டுறு வாடகைப் பணமாக ரூபா. 1,200,000.00 என்று காட்டப்பட்டதன் விளைவாக தற்போதைய பொறுப்புடைமை ரூபா. 300,000.00 என்று மிகையாக விவரிக்கப்பட்டுள்ளது. மன்னார் கிளையில் கடந்த காலாண்டுகளுக்கு செலுத்த வேண்டிய குத்தகை வாடகை ரூபா. 240,000.00 கணக்கில் கொண்டு வரப்படவில்லை. எனவே, நடப்பு ஆண்டின் துண்டுவிழும் தொகையும் தற்போதைய பொறுப்புடைமையும் குறித்த பெறுமதியின் மூலம் குறைமதிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2020 ஆம் ஆண்டுக்கான குத்தகை வாடகைத் தொகையான ரூபா. 423,146, நடப்பு ஆண்டின் குத்தகை வாடகைக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்ததால், அதே பெறுமதியின் மூலம் குறித்த துண்டுவிழும் தொகை மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) வருடாந்த சேவை ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா. 141,450 03 டோனர்கள் கொள்வனவு செய்வதற்கும் கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்ட ரூபா. 183,639.00 பெறுமதி கொண்ட அலுமினியம் பொருத்துகையினைக் கொள்வனவு செய்வதற்கும் செலுத்தப்பட்ட ரூபா.159,390 உள்ளடங்கலான ரூபா. 484,479.00 தொகையானது மதிப்பீட்டு ஆண்டுக்கு உட்பட்ட நிலையான சொத்துகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அந்த வகையில், அந்தப் பெறுமதி மூலமாக நிலையான சொத்துகளின் பெறுமதியானது மிகையாக விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்குறித்த சேவை ஒப்பந்தத்திற்கும் டோனர் கொள்வனவு செய்வதற்கும் செலுத்தப்பட்ட தொகையாகிய ரூபா. 300,840.00 தொகையானது ஆண்டின் வருமான மற்றும் செலவினக் கூற்றில் காட்டப்படவில்லை. எனவே, அத்தொகை மூலம் துண்டுவிழும் தொகையானது குறைமதிப்பிட்டு விவரிக்கப்பட்டுள்ளது.

(உ) மதிப்பாண்டின் எரிபொருள் செலவினமாக ரூபா. 2,955,159.00 குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுவனத்தின் வாகனங்களுக்கான எரிபொருள் செலவினம் அமைச்சின் மூலம் எரிபொருள் செலவினமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் அலுவலர்களுக்கு எரிபொருள் செலவாக செலுத்தப்பட்ட தொகைகள் ஆகியவை அனைத்தும் அதில் அடங்கும். எனினும், குறித்த தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாகவே எனது கணக்காய்வை மேற்கொண்டுள்ளேன். அத்தகைய நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் எனது அறிக்கையின் நிதிசார் கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வு மேற்கொள்ளும் போது கணக்காய்வாளர் கொண்டிருக்க வேண்டிய பொறுப்புகள் என்ற பகுதியில் மேலதிகமாக விவரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதிவாய்ந்த அபிப்பிராயத்தை மேற்கொள்வதற்கான அடிப்படையாக கணக்காய்வுக்காக நான் பெற்றுக்கொண்ட சான்றுகள் போதுமானவையாகவும் பொருத்தமானவையாகவும் உள்ளன என்றும் நம்புகின்றேன்.

### 1.3. நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை 2023 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பிறகு எனக்கு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிதி நிலைமை பற்றிய அறிக்கைகள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் சேர்க்கப்படாமல், நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை 2023 இல் சேர்க்கப்பட்டுள்ள

தகவல்கள் யாவும் நிறுவனத்தின் ஏனைய தகவல்கள் என்றே கொள்ளப்படும். ஏனைய மற்ற தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்பேற்க வேண்டும்.

நிதிக் கூற்றில் உள்ள எனது அபிப்பிராயத்தில் வெளிப்படுத்தப்படாதுள்ள ஏனைய தகவல்கள் தொடர்பில் எத்தகைய உறுதிப்பாட்டையும் அல்லது கருத்தையும் நான் தெரிவிக்கமாட்டேன்.

எனது கணக்காய்வில் உள்ள நிதிக் கூற்றுகள் மீதான எனது பொறுப்பு, மேலே குறிப்பிடப்பட்ட அடையாளம் காணப்பட்ட அல்லது வேறு வழியில் பெறப்பட்ட தகவல்களைப் பெற்று அவற்றை எனது அறிவிற்குட்பட்ட வகையில் படித்து, அது நிதிக் கூற்றுகளுடன் அளவுகோலாக சரி செய்யப்படவில்லையா என்பதைதைச் சரிபார்த்து அறிக்கையிடுவதாகும்.

நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையைப் படிக்கின்ற போது, முனைப்பழியுள்ள பிழைகள் அதில் உள்ளதாக நான் முடிவுறுத்தினால் அத்தகைய விடயங்களைத் திருத்திக்கொள்வதற்காக கட்டுப்படுத்தும் திறத்தவர்களுடன் அவ்விடயங்களைக் கலந்துரையாடுதல் வேண்டும். திருத்தப்படாதுள்ள பிழைகள் மேலும் தென்படுமாயின் அவை என்னால் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இற்கு அமைவாக உள்ளடக்கப்படும்.

### 1.4. நிதிசார் கூற்றுகள் தொடர்பில் முகாமைத்துவமும் நிர்வாகப் பொறுப்பாளிகளும் கொண்டுள்ள பொறுப்புகள்

இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையாகவும் நியாயமான முறையிலும் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மோசடியான முறையிலோ அல்லது பிழையான வகையிலோ ஆவணங்களின் மூலம் பிழையாக அறிக்கையிடப்படாத வகையிலான நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு வசதியாக அத்தகைய உள்ளக கட்டுப்பாடானது முகாமைத்துவம் நிர்ணயிக்கின்றவாறு அமைவது அவசியமானதாகும்.

நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைக்கவோ அல்லது செயல்பாடுகளை நிறுத்தவோ விரும்பாத வரையில், அல்லது நிலவும் பிரச்சினையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதல் மற்றும் கணக்கியலில் நிலவும் பிரச்சினைகளின் அடிப்படையைப் பயன்படுத்துதல் போன்றவற்றின் திறனை மதிப்பிடுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆட்களே நிறுவனத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாளர்களாவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் உப பிரிவு 16 (1) இன்படி, நிறுவனம் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும், இது நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலமுறை நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்க உதவுகிறது.

### 1.5. கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக் கூற்றுகள் மோசடியான முறையில் அல்லது பிழையான முறையில் ஆவணங்கள் மூலம் பிழையாக அறிக்கையிடப்படாது உள்ளனவா என்பது குறித்த நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வெளியிடுவதுமே எனது குறிக்கோள் ஆகும். நியாயமான உறுதிப்பாடு என்பது உச்சபட்ச உறுதிப்பாடாகும். ஆயினும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வு ஆவண ரீதியில் பிழையாக அறிக்கையிடப்பட்டுள்ளமையினை, அவ்வாறு தென்படுமிடத்து, எப்போதும் அவற்றைக் கண்டறியும் என்பதற்கான உத்தரவாதம் கிடையாது. பிழையான அறிக்கையிடல் என்பது மோசடியின் மூலமாகவோ அல்லது பிழை மூலமாகவோ மாத்திரம் ஏற்படுகின்றது.

இந்த நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்கின்ற பயனர்களது பொருளாதாரத்தில் தனிப்பட்ட வகையிலோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குச் செலுத்துவதற்கு நியாயமான வாய்ப்பு உள்ளதாகக் எதிர்பார்க்கப்படுகின்ற பட்சத்தில் அவ்விடயங்கள் பிழையான அறிக்கையிடல்களாகக் கொள்ளப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவான கணக்காய்வு ஒன்றின் ஓர் அங்கமாக, கணக்காய்வு முழுவதும் தொழில்முறைசார் நீதியைப் பிரயோகித்து தொழில்முறைசார் ஐயத்தையும் பேணுகின்றேன். மேலும்

- மோசடி அல்லது பிழை காரணமாக, நிதிக் கூற்றுகள் தவறான முறையில் ஆவண ரீதியாக அறிக்கையிடப்படும் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடுகிறேன், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துகிறேன், மேலும் எனது அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுகிறேன். மோசடி என்பது சதிமோசம், போலி ஆவணப்படுத்தல், வேண்டுமென்ற புறக்கணிப்பு, தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றுடன் தொடர்புபடும் என்பதால், மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாமல் இருப்பதால் நேரும் ஆபத்து பிழையின் விளைவாக ஏற்படும் ஆபத்தை விட உயர்ந்த ஆபத்தாகும்.

- கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சூழ்நிலைகளுக்குப் பொருத்தமானவையாக அமைகின்ற கணக்காய்வு தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிதலை நான் பெற்றுள்ளேன், ஆனால் நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்றிறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.

- நான் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகள் போன்றவற்றை மதிப்பீடு செய்கிறேன்.

- கணக்கியல் மற்றும் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், முகாமைத்துவத்தின் சரியான பயன்பாட்டின் சரியான தன்மையை முடிவு செய்கிறேன், நிறுவனத்தில் நிலவும் பிரச்சினை ஒன்று தொடர்கின்ற வகையில் நிறுவனத்தின் செயற்றிறனில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளவாறு நிறுவனத்தின் நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான ஆவணங்களில் நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பதையும் முடிவு செய்கின்றேன். ஒரு நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்தால், நிதிக் கூற்றுகளில் உள்ள சம்பந்தப்பட்ட வெளிப்பாடுகள் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எனது அபிப்பிராயத்தை மாற்றுவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையில் அவ்விடயம் குறித்த கவனத்தை ஈர்ப்பது எனக்கு அவசியமாகின்றது. எனது கணக்காய்வாளர் அறிக்கையின் திகதி வரையில் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலேயே எனது முடிவுகள் உள்ளன. எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிபந்தனைகள் ஆகியன நிறுவனத்தை ஒரு பிரச்சினையாகக் காட்டுவதை நிறுத்தக்கூடும்.

- நிதிக் கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம், வெளிப்படுத்தல்கள் உட்பட, நிதிக் கூற்றுகள் நியாயமான சமர்ப்பிப்பை அடையும் விதத்தில் அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதையும் மதிப்பீடு செய்கிறேன்.

எனது கணக்காய்வின் போது நான் கண்டறிந்த உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க கணக்காய்வுக் கண்டறிகைகள் தொடர்பாக, ஏனைய விடயங்களுடன் சேர்த்து ஆளுகைக்கு பொறுப்பானவர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் குறித்த அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக திட்டவட்டமான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.1 பாதகமான அபிப்பிராயத்தை வழங்குவதற்கான காரணியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவைத் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன், மேலும் எனது மதிப்பாய்வில் அவதானிக்கப்பட்ட வரையில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (அ) இன் தேவைப்பாடுகளக்கு அமைவாக அலுவலகத்தால் தேவைக்கேற்ப முறையான கணக்குப் பதிவுகள் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக அலுவகத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த வருடத்திற்கு ஒப்பான நிலையில் உள்ளன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக கடந்த வருடத்தில் என்னால் முன்னெடுக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் போதுமான விடயங்களை வரையறுத்து கீழ் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள எவ்விடயமும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாட்டிற்கு அமைவாக அலுவலகத்தின் நிர்வாக சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு அலுவலகத்துடன் தொடர்புடைய ஏதேனும் உடன்படிக்கை பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வியாபாரத்திற்கு அப்பாற்பட்ட தொடர்பு உள்ளதெனவும்

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாட்டிற்கு அமைவாக கீழ் குறித்த அவதானிப்பு தவிர்ந்து ஏதேனும் உரிய எழுத்து மூலமான சட்டம் அல்லது அலுவலகத்தின் நிர்வாக சபையினரால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடுதல்.

| சட்டதிட்டங்கள்.'. விதிமுறைகள் பற்றிய குறிப்பு | அவதானம் |
|---|---|
| 2020 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றுநிருப இல 01.'.2020 | |
| (i) 9.1 (ஆ) அத்தியாயம் | அலுவலகத்தினால் பதவி நிலை அல்லாத அலுவலர்களுக்கு 7 தடவைகளில் மொத்தமாக ரூபா. 331,000 தற்காலிக இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 9.1 (ஆ) மற்றும் நிதிப்பிரமாணம் 371 (5) | துணைக் கட்டுநிதி வழங்கப்பட்ட பின்னர் உரிய செயற்பாடு நிறைவடைந்து 10 நாட்களினுள் அப்பணம் மீள வழங்கவேண்டி இருந்தாலும், 12 அலுவலர்கள் 14 தடவைகளில் பெற்றுக்கொண்ட துணைக் கட்டுநிதியைச் செலுத்த 13 தொடக்கம் 65 நாட்கள் வரையான காலப்பகுதி தாமதப்படுத்தப்பட்டிருந்தது. |
| (iii) 9.1 (இ) மற்றும் நிதிப்பிரமாணம் 371 (4) | குணக்கீட்டு அலுவலர் தானே அக்கட்டுநிதியைப் பயன்படுத்துவது முறையற்றது என்று உள்ள நோக்கங்களுக்காக எக்கட்டுநிதியும் பயன்படுத்தப்படலாகாது என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் துணைக் கட்டுநிதியாக நான்கு அலுவலர்கள் பெற்றிருந்த ரூபா. 526,800 தொகையானது அது செலவழிக்கப்படாமலேயே திருப்பி வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) நிதிப் பிரமாணங்கள்<br>(i) 756 (6) | ஜுன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் மதிப்பீட்டு சபையின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று இருக்கின்ற போதிலும் 30.06.2024 இற்குள் அலுவலகத்தின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீட்டு சபையின் அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| (ii) 1646 | கொண்டுள்ள வாகனங்கள் நாளாந்தம் ஓடும் அட்டவணைகள், அவற்றின் மாதாந்த தொகுப்பு அறிக்கைகள் போன்ற அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னரே கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று இருப்பினும், அலுவலகத்துக்குச் சொந்தமான வாகனங்கள் ஓடும் அட்டவணைகள் மற்றும் மாதாந்த தொகுப்பு அறிக்கைகள் ஆகியன அதற்கேற்ப சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) 29.12.2016 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 30.⁚.2016 | |
| - பந்தி 3 | ஒவ்வொரு 12 மாதங்கள் நிறைவுறுகின்ற சந்தர்ப்பத்திலும் அல்லது 25,000 கிலோ மீற்றர் ஓடிய பின்னர் வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உள்ள போதிலும், அது அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. |
| - 22.08.2016 ஆந் திகதிய 12.⁚.2003 ளை ஆம் இலக்கத்தினால் திருத்தப்பட்ட 12.⁚.2003 ளை ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 27.02.2017 ஆந் திகதிய 03 (ஆ) (ஈ) ஆம் இலக்க சுற்றறிக்கை | பொது மக்கள் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், மற்றும் ஏனைய விளக்கவுரைகள் போன்றவற்றுக்காக பங்கேற்கின்ற உரைபெயர்ப்பாளர்களுக்கு ஒரு மணித்தியாலத்துக்கு ரூபா. 500.00 மற்றும் அதை அடுத்து வருகின்ற ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் அதே தொகையினைச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், 5 விசாரணைச் செயற்பாடுகளில் பங்கேற்ற 35 உரைபெயர்ப்பாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 4,500.00 வீதம் ரூபா. 243,000.00 அவர்கள் பணியாற்றிய மணித்தியாலங்களைக் கணக்கிலெடுக்காமல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) 22.08.2022 ஆந் திகதிய நுனு 05.⁚.2022 ஆந் திகதிய பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை | |

| | | |
|---|---|---|
| (i) | பந்தி 03 | ஆரசாங்க அலுவலர் ஒருவர் தனது சேவைக் காலத்துள் உச்சபட்சமாக 5 வருட காலம் வெளிநாடு ஒன்றில் தொழில் ஒன்றைப் புரிவதற்காக அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கலாம் என்று உள்ள போதிலும், அலுவலகத்திலுள்ள அலுவலர் ஒருவருக்கு அவரது பட்டப்பின் படிப்பினைத் தொடர்வதற்காக அச்சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த 5 வருடகால விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | பந்தி 3.9 மற்றும் 3.13 | 02.10.2023 ஆந் திகதி வெளிநாட்டுக்குச் சென்றுள்ள அலுவலரிடமிருந்து சுற்றறிக்கையின் பிரகாரம் அந்நியச் செலாவணியை அறவிடுவதற்கான நடவடிக்கை 30.04.2024 ஆந் திகதி வரையில் மேற்கொள்ளப்படவில்லை. பயன்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற வதிவிடமற்ற வெளிநாட்டு நாணயம் குறித்த தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்று மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து பணிப்பாளர் சபைக்கும் அமைச்சின் செயலாளருக்கும் மாதாந்தம் அறிக்கையிடப்பட வேண்டும் என்று உள்ள போதிலும், வெளிநாட்டுக்குச் சென்றுள்ள அத்தகைய அலுவலர் குறித்த அத்தகைய எவ்வித அறிக்கையும் அலுவலகத்தினால் தயாரிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
